முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

—வார இதழ்—

முரசு 4 | 21—2—58 | வெள்ளி | ஒலி 41



'அரசியல் கட்சியினர் கண்ணியமாகப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று 14—2—58 அன்று .

டி. டி. கிருஷ்ணமாச்சாரி அண் கோ—என்பது யூனியன் நிதியமைச்சரால் விற்பனை ஏஜன்சி முறையில் நிறுவப்பட்ட ஸ்தாபனமாகும். டி. டி. கே. யூனியன் மந்திரி சபையில் இடம் பெற்றதும் அவர் மேற்படி ஸ்தாபனத்திலிருந்து தனது தொடர்புகளை அறுத்துக் கொண்டார். அதனால் அந்த ஸ்தாபனம் அவரது குமாரர்கள் வசம் போய்ச் சேர்ந்தது.

நிதியமைச்சரின் பெயரை வைத்துக் கொண்டிருக்கும் இந்தக் கம்பெனி இதைவிடத் தகுதி பெற்ற வேறு கம்பெனிகளைவிட அதிகச் சலுகை பெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த ஸ்தாபனம் இப்போது மருந்துகள், சாயங்கள், ரசாயனப் பொருள்கள் போன்ற சுமார் 15-க்கு அதிகமான பொருள்களை விற்பனை செய்யும், கோடிக் கணக்கான ரூபாய்களைப் புரட்டுகின்ற ஸ்தாபனமாக இருக்கிறது.

1952-ம் ஆண்டுவரை பென்சிலின் ஸ்ட்ரெப்டோமைசின் போன்ற 'பிசர்' தயாரிப்புகளுக்கு 'டைஸ் மெடிக்கல் ஸ்டோர்ஸ்'தான் விற்பனை

★ வெள்ளைக்காரனின் சாட்சாத் ஏஜண்டு...

★ கதருடுத்தி வேஷம் அணிந்த 'கனம்'...

★ இன்று ஒரு பச்சை சந்தர்ப்பவாதி...

★ அவர்தான் 'வாணிபத் திமிங்கலமாம்'...



டி. டி. கே.!

தயாரிப்புகள் 1955-ல் கிருஷ்ணமாச்சாரியின் கூடடத்துக்குள் சேர்ந்து கொண்டன.

பிரிட்டிஷ் நிறுவனமான 'சி. எல். பென்சார்ட்டின்' தயாரிப்புகளுக்கான இறக்குமதி லைசென்சும் 1955-ம் ஆண்டில் டி. டி. கே. அண் கோ—விற்குக் கிடைத்தது. இதைத் தொடர்ந்து 1956-ல் 'ஜே. எல், மாரிசன் அண் சன்ஸ்' ஆரம்ப காலத்திலிருந்து விநியோகித்து வந்த பொருள்களுக்கான விற்பனை உரிமையும் டி. டி. கே. அண் கோ—விற்குக் கிடைத்தது.

1 56-ல் டி. டி. கே. அண் கோ—வினர் 'ஹாலிவுட் மாக்ஸ் பேக்டரி' தயாரிக்கும் அலங்காரச் சாமான்களையும், 'பிளிட்' போன்ற பொருளையும் எடுத்துக் கொண்டனர். பிறகு வாட்டர்மேன் பேனாக்கள் ஸ்விட்சர்லாந்து நாட்டுத் விதாபால் பொருடகள், ஈனோஸ் புரூட் சால்ட், பிரைல்கிரீம், சிலவி கிரீன், மக்லீன்ஸ் பற்பசை, பற்பொடி, முதலியவைகளும் இதற்கு முன்பு இவற்றின் விற்பனை ஏஜண்டுகளாயிருந்தவர்களை நீக்கி விட்டு

★ வரிச் சுமையை ஏற்றியவர்- ★ வரும் 'பொருள்' சேர்த்தது உண்டா?

ஏஜண்டாக இருந்தது. பிறகு இது நின்று போகவே சுமார் ஆறு மாதங்களுக்கு அந்தப் பொருள்களுக்கு இந்தியாவில் வேறு யாருமே விற்பனையாளர்கள் இல்லாமல் இருந்தது.

ஆனால், திடீரென்று 1954-ம் ஆண்டு இறக்குமதித் துறையில் ஈடுபட்டோர் அனைவரும் திடுக்கிடும் வகையில் பம்பாயிலுள்ள 'ராவிசன் பார்மசியூகல்ஸ கம்பெனி'க்கு இறக்குமதி லைசென்ஸ் வழங்கப்பட்டது. ஆனால் மேற்சொன்ன ராவிசன் கம்பெனிக்கு இந்திய அரசாங்கம் இறக்குமதி லைசென்ஸ் பெறுவதற்காக விதித்திருக்கும் தகுதிகள் இடையாதாம். அரசாங்கம் விதித்திருக்கிற தகுதிகளின்படி அந்த இறக்குமதி லைசென்ஸ் பெற அதிகமான மூலதனமும், நீண்டகால அனுபவமும் அத்யாவசியமானவை. உதாரணமாக 4,000 ரூபாய் பெருமானமுள்ள பொருள்களுக்கு 'பர்மிட்' வாங்கவேண்டுமானால் அந்தக் கம்பெனி ஆண்டொன்றுக்கு ரூ. 48,000—க்கு மேல் கொள் முதல் செய்யக்கூடிய வசதிபெற்றிருக்க வேண்டும். அதன்படி பார்க்கப்போனால் 'பிசர்' கம்பெனியின் பொருள்களுக்கு ஏஜன்சி உரிமை பெற வேண்டுமானால் ஒரு கம்பெனி ஆண்டொன்றுக்கு கோடிக் கணக்கான ரூபாய்களுக்கு வியாபாரம் நடத்த வேண்டும்.

ஆனால் மேற்படி உரிமை பெற்ற ராவிசன் கம்பெனி வெறும் பெயருக்கு மட்டும் தானாம்! அந்தக் கம்பெனி பொருள்களை இறக்குமதிசெய்த பிறகு 5 சதவித கமிஷனுக்கு அவையனைத்தையும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அண் கோ—விற்குக் கொடுத்துவிடுமாம்!

இதே போலவேதான் 1954-ம் ஆண்டிலும் இந்திய அரசாங்கம் டி. டி. கே. அண் கோ—விற்கு தங்கச் சுரங்கத்தையே கொடுத்தது! அதாவது அந்த ஸ்தாபனம் சோடா ஆஷ், மருந்துகள் போன்றவைகளுக்கான விற்பனை உரிமையும், அதன் பிறகு 'அதுல்ஸ் கம்பெனி'யாரிடமிருந்து சாயங்களின் விற்பனை உரிமையும் பெற்றது.

இதன் பிறகு அந்த ஸ்தாபனம் அதி உன்னதமான வேகத்தில் விற்பனை உரிமைகளைக் குவித்து வந்தது. இருதய நோய்களுக்கு விலையுயர்ந்த மருந்துகளைத் தயாரிக்கும் ஸ்விட்சர்லாந்து நாட்டு 'ரோபாபார்ம்' என்கிற கம்பெனியின் டி. டி. கே. அண் கோ—வின் கைக்கு வந்து சேர்ந்தது. அதைப் போலவே 'காட்பரி' பதார்த்தங்களும் இந்த ஸ்தாபனத்திற்குக் கிடைத்தது.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்—காமராசரோடு கருத்தொருமித்து நிற்பவர்; பெரியாரின் ஆதரவு பெற்று சென்னைத் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றவர்—இப்படிப் பல தகுதிகள் இருப்பினும் அவர்மீது கூறப்படுகிற குறைகள் குன்றுபோல் உயர்ந்து காணப்படுகின்றன.

அவர் திறமையுள்ளவரா; இல்லையா—என்று முடிவு கட்டுவதில் போட்டி இருக்கலாம்; ஆனால் அவர் ஒரு பச்சை சந்தர்ப்பவாதி என்று தீர்மானிப்பதிலே கண்டிப்பாக ஏகோபித்த கரகோஷமே இருக்கும்!

வெள்ளைக்காரனுக்கு சாட்சாத் ஏஜண்டாக இருந்தவர், டி. டி. கே! பிறகு காலம் மாறியதும் கதர் சட்டை அணிந்து கொணடார்; 'கன'மாகவும் மாறினார்!

பாவம்; இப்போது முந்த்ரா விவகாரத்தில் விலகல் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு நிதி அமைச்சர் பதவியிலிருந்து பரிதாபமாக விலக்கப்பட்டிருக்கிறார்!

அவர் பதவி ஏற்றது 1952-ம் ஆண்டே, மே மாதம்!

அதற்குப் பிறகு அவருடைய பெயரால் இயங்கிவரும் கம்பெனியின் வியாபாரம் 'மட மட'வெனப் பெருகியிருக்கிறதாம்!

இந்தத் தகவல் ஜனவரி 11-ந் தேதி 'பிளிட்ஸ்' பத்திரிகையில் **"1952-லிருந்து 'டி. டி. கே. அண் கோ'வின் சொத்துக்களைப்பற்றி விசாரணை நடத்துக"** என்ற தலைப்பில் பலருக்கு ஏற்கனவேயே தெரிந்த—ஆனால் திடுக்கிடத்தக்க—தகவல்கள் வெளியாகியிருந்தன.

—அவற்றை டி. டி. கே. எங்கு இருக்கிறாரோ அதே டெல்லியிலிருந்து வெளிவரும் 'ஆர்கனைசர்' என்ற பத்திரிகையும் எடுத்து வெளியிட்டிருந்தது. ஆனால் இதுவரை அந்தக் கட்டுரை குறிப்பிடும் தகவல்கள் தவறு என்று யாரும் மறுத்துரைக்கவில்லை. அந்தக் கட்டுரையைத்தான் இதோ தமிழில் தருகிறோம்!

வியாபார வட்டாரத்தில்—குறிப்பாக டி. டி. கே. அண் கோ-வின் செயல் முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களிடையில்—அரசாங்கம் ஒரு விசாரணைக் கமிட்டியை ஏற்படுத்தி: கிருஷ்ணமாச்சாரியார் யூனியன் மந்திரி சபையில் 1952-ம் ஆண்டு மே மாதம் அமைச்சராகச் சேர்வதற்கு முன்பு டி. டி. கே அண் கோ கம்பெனியின் நிலையையும், இன்று அது மிகப் பிரமாண்டமான அளவு பெருகியிருப்பது பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்கிற கருத்து வளர்ந்து வருகிறது.

பொதுஜன ஒழுக்கத்தை நிலைநாட்டவும்; நிதியமைச்சரது பெயர் சொந்த நலன்களுக்காகவும் குடும்ப நலன்களுக்காகவும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்று கருதும் வியாபார சமூகத்தினரின் எண்ணத்தை மாற்றுவதற்காகவும் இப்படி ஒரு விசாரணை மிகவும் அவசியம் என்றும் கருதப்படுகிறது.

○○○

முரசொலி

சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா	8—00
ஆறு மாதம்	4—50

வெளி நாடு

ஆண்டு சந்தா	9—00
ஆறு மாதம்	5—00

வெள்ளி 21-2-58 சென்னை

அராபிய ஐக்கிய நாடு!

எகிப்து

சிரியா

—உலகத்திற்கோர் புதுமையாய் இரு தனி நாடுகளாக இயங்கி வந்தவைகள் இணைந்திருக்கின்றன.

ஆம்; நாடுகள் பல பிரிந்து தனித்தியங்க வேண்டுமென்ற எண்ணம் உருவாகி; பல சந்தர்ப்பங்களில் நிறைவேறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நாடுகள் இரண்டு ஒன்று சேர்வது என்பது உண்மையிலேயே புதுமைதான்!

இரு நாடுகள்; பூகோள அமைப்பிலேகூட அவையிரண்டும் சேர்ந்து இல்லை.

—கடல் பிரிக்கிறது; இடையிலே லெபனன், இஸ்ரேல் நாடுகள் இருக்கின்றன. இருந்தாலும் அவை ஒன்று சேர்ந்திருக்கின்றன!

இனிமேல் இரு நாடுகளுக்கும் ஒரு அரசாங்கம்; ஒரு கொடி; ஒரு அரசியல் சட்டம்; ஒரு இராணுவம்; ஒரே ஒரு பாராளு மன்றம்—இவைதான் இருக்கும்!

ஒன்றுபட்ட அந்த அரேபிய நாட்டிற்கு ஒரே ஒரு குடியரசுத் தலைவர்தான் இருப்பார்!

அந்தக் குடியரசுத் தலைவர் தங்கள் நாட்டுக்காரராகத்தான் இருக்க வேண்டுமென்று சிரியா நாட்டுக்காரர்கள் நினைக்கவே இல்லை!

எகிப்து நாட்டைச் சேர்ந்த இளம் தலைவர் நாசர்தான் அந்தப் பதவி வகிக்கப் போகிறார்.

சிரியாவின் தற்போதைய தலைவர் சுக்ரி எல் குவாட்லி டமாஸ்கசில் மிகவும் பெருந்தன்மையோடு குறிப்பிட்டிருக்கிறார், "நாசர் தலைவராக வருவதற்கு வாக்களிக்கும் முதல் பிரஜை நானாகத்தான் இருப்பேன்," என்று!

இந்த நிலை திடீரென்று உணர்ச்சி வேகத்தில் ஏற்பட்ட மாற்றமல்ல!

அராபியர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டுமென்கிற ஆசை கடந்த ஐம்பது ஆண்டுகளாக வெறும் கனவாகவே இருந்தது.

அந்த ஐம்பதாண்டுக் கால நெடுங் கனவு பலிதமான வரலாறுதான் சிரியாவும், எகிப்தும் அராபிய ஐக்கிய நாடு என்ற பெயரில் ஒன்றுபட்டிருக்கும் நிகழ்ச்சியாகும்!

1955-ம் ஆண்டிலேயே இதற்கான முயற்சிகள் துவங்கப்பட்டன. அந்த ஆண்டு இரு நாடுகளும் ஒரு இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டன.

அதன்படி சிரியாவின் இராணுவமும் எகிப்தின் இராணுவமும் ஒன்றாக இணைந்து; எகிப்தின் தலைமையில் இயங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சிதான் இந்த அராபிய ஐக்கிய நாட்டின் உதயம்!

—இந்த இணைப்பிற்கு அராபிய ஐக்கிய உணர்ச்சிதான் முழுமுதற் காரணமென்று கூறப்பட்டாலும் இதற்கு மூலம் வேறு அரசியல் காரணங்கள்— என்றும் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த இரு நாடுகளும் ரஷ்யச் சார்புடையவைகளாகக் கருதப்படுபவை.

இருந்தாலும் எகிப்தை முழுக்க முழுக்க ரஷ்யாவோடு அரசியல் மஞ்சத்தில் கொஞ்சி விளையாடும் நாடாகக் கூறிவிட முடியாது. ஏனெனில் இன்னமும் அங்கே கம்யூனிஸ்ட் கட்சியின்மீது விதிக்கப்பட்டிருக்கிற தடை நீக்கப்படவில்லை. இருந்தாலும் அதற்கு ரஷ்யாவுடன், இதர வல்லரசுகளுடன் இருப்பதைவிட தொடர்பு அதிகம் உண்டு என்பதை யாரும் மறைக்க முடியாது.

எனவே அந்த வேகத்தில் அமெரிக்கச் சார்புடைய துருக்கியிடமிருந்தும்; கோரும் 'பேயாக' வடிவமெடுத்து மிரட்டிக் கொண்டிருக்கும் பாக்தாத் ஒப்பந்தத்திலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும்தான் எகிப்தும் சிரியாவும் இணைந்திருக்கின்றன என்று சிலர் கருதுகிறார்கள்!

எது எப்படியிருந்தபோதிலும் அந்த இரு நாடுகளும் இணைந்த அராபிய ஐக்கியநாடு என்பது நிலை பெற்ற உண்மையாகி விட்டது.

இதைத் தொடர்ந்து அராபிய முடியரசு நாடுகளான ஈராக்கும் ஜோர்டானும்கூட இணைவதாக முடிவு செய்திருக்கின்றன.

—இந்தப் பின்னணியில்தான் நாமும் நமது பிரிவினை இலட்சியத்தைச் சிறிது உற்று நோக்கி; பிரிவினை வேண்டாமெனப் பேருபதேசம் செய்யும் மாற்றுக் கட்சித் தோழர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எகிப்து

சிரியா

—இரு தனி நாடுகளாகக் **கருதப்பட்டவை** ஒன்றாக இணைகின்றன.

இந்தியா

காஷ்மீர்

—அல்லது

இந்தியா

திராவிடம்

—ஒரே நாடு என்று **கருதப்படுகிற** இந்தப் பகுதிகள் பிரிய வேண்டுமென்கின்றன. காஷ்மீர் பிரிய வேண்டுமென்று தற்போது ஷேக் அப்துல்லா அறிவித்திருக்கிறார்; திராவிடம் பிரிய வேண்டுமென்று தி. மு. கழகம் போரிட்டு வருகிறது.

எகிப்தும் சிரியாவும், இடையிலே கடலும் இரு நாடுகளும் இருந்தபோதிலும் எங்ஙனம் ஒன்று சேர்ந்தன?

ஒரே ஒரு அடிப்படையில்! எகிப்திலிருப்பவர்களும், சிரியாவில் வாழ்பவர்களும் தாங்கள் அராபியர் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர்ந்தார்கள்; அதனால் இரு நாடுகள் என்று பிரிந்திருப்பது தவறு என உணர்ந்து இணைந்தார்கள்!

ஆனால் இந்திய உபகண்டத்தில் நிலைமை அப்படி அல்ல.

ஒரு நாடாகக் கருதப்படுகிற இந்தியாவின் தென் பகுதியில் இருக்கும் நமக்கு இந்தியர் என்கிற உணர்ச்சி இயற்கையிலேயே இல்லை. நாம் திராவிடர்; தனித் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள்—என்கிற உணர்ச்சிதான் மேம்பட்டு நிற்கிறது.

அராபிய இனத்தவர்களின் தேசிய உணர்ச்சி எகிப்து; சிரியா ஆகியவற்றின் எல்லைக் கோடுகளை அழித்து; இராணுவத்தை ஒன்றாக்கி; ஒரே நாடாக்கியது!

அந்த இரு நாடுகளை ஒன்றாக்கிய தேசிய உணர்ச்சிதான் —நாம் இந்தியர்கள் அல்ல; திராவிடர்கள்; திராவிட தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள்—என்கிற அதே தேசிய உணர்ச்சிதான் இங்கு இரு நாடுகளைத் தோற்றுவிக்கும் சக்தியாக இருக்கிறது!

—அதனால்தான் நாம் அழுத்தந் திருத்தமாகச் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம்:

எகிப்து—சிரியா நாடுகளின் இணைப்பு நமது பிரிவினை இலட்சியத்தைப் பலவீனப்படுத்தவில்லை; மேலும் பலப்படுத்தத்தான் செய்கிறது.

இப்படி இரு நாடுகளும் இணைந்திருக்கின்றனவே; அப்படியாவது மக்கட் தொகையைப் பொருத்த அளவில் நாம் கோரும் திராவிடத்தை விடப் பெரியது என்று நினைக்கிறீர்கள்?

உண்மை அப்படி அல்ல!

எகிப்து நாட்டின் மக்கட் தொகை இரண்டு கோடியே நாற்பது லட்சம்!

சிரியாவின் மக்கட் தொகையோ வெறும் நாற்பது இலட்சம்!

இரண்டும் இணைந்த அராபிய ஐக்ய நாட்டின் மொத்த ஜனத்தொகை இரண்டு கோடியே எண்பது லட்சம்தான்!

சின்னஞ் சிறிய கீரைப் பாத்தி என்கிறார்களே; அந்தத் தமிழ் நாட்டின் மக்கட் தொகைகூட சுமார் மூன்று கோடி!

ஆக மக்கட் தொகையைப் பொருத்த வரையில் அராபிய ஐக்கிய நாட்டிலே தமிழ் நாட்டிலே வாழ்பவர்களைவிடக் குறைவானவர்கள்தான் வாழ்கிறார்கள்!

இரண்டு கோடியே எண்பது லட்சம் பேருள்ள அராபியர்கள் ஒன்றாக இணைந்து அராபிய ஐக்கியநாடு நிறுவி தனித்து வாழும்போது சுமார் 9 கோடி மக்கட் தொகையுள்ள திராவிடம் பிரிந்து ஏன் வாழ முடியாது?

—எகிப்து சிரியா இணைப்பு இந்தச் சிந்தனையை மேலும் தூண்டி விடுவதாக இருக்கட்டும்!

ஃ

மணல் மேடு ஏறியோரே; ★ சதிராடினால் சரிந்திடுவீர்! ★

எட்டாவது குடியரசு தின விழாவும் கொட்டு முழக்கோடு அரசினரால் அண்மையில் கொண்டாடப்பட்டது. ஆனால் குடியரசுப் பண்பு. ஆட்சிக் கொலுவிருக்கும் 'கனம்'களிடமும், ஆளும் பொறுப்பேற்றுள்ள கட்சியிடமும், அக்கட்சியைத் தலைமை தாங்கி நடத்தும் தலைவர்களிடமும் 'மருந்து'க்குக்கூட இல்லை என்பதை சொல்லாலும் செயலாலும் இன்று நாட்டவர்களுக்கு அவர்கள் உணர்த்தி வருகின்றனர்.

அகில இந்திய காங்கிரசுக் கட்சி குடியாட்சிப் பண்பை—சனநாயகக் கோட்பாட்டை எந்த அளவுக்கு துச்சமாக மதிக்கிறது என்பதற்கு பூனா மாவட்ட காங்கிரசுக் கட்சியினர் ஒரு புனிதமான எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றனர். பூனா மாவட்ட நாட்டாண்மைக் கழகத்தில் உறுப்பினர்கள் பலர் காங்கிரசுக் கட்சியினராக இருந்தும் அவர்கட்கிடையே ஏற்பட்ட பொறாமை, பொச்சரிப்பு, போட்டி, பதவிப் பித்து ஆகியவற்றின் காரணத்தால் சம்யுக்த மராட்டிய சமிதியைச் சார்ந்த திரு. குந்த் என்பவர் நாட்டாண்மைக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு தங்கள் கட்சியினர் பெரும்பான்மையினராக இருந்தும் எதிர் கட்சியைச் சார்ந்த ஒருவர் தலைவராகிவிட்டாரே என்ற எண்ணம் கொண்ட காங்கிரசுக் கட்சியினர், எப்படியும் அவரைக் கவிழ்க்க வேண்டும் என்று திட்டமிட்டனர். வழக்கமாக ஆண்டுதோறும் நாட்டாண்மைக் கழகத் தலைவருக்குத் தரப்படும் 3,000 ரூபாய் படியை எதிர்க் கட்சியினர் தலைவராக வந்துவிட்ட காரணத்தால், குறைத்து விடுவது என்று முடிவு செய்தனர். அதன்படி இவ்வாண்டில் தலைவருக்கு ஒரு ரூபாய் மட்டுமே தான் படியாகத் தரப்படும் என்று நாட்டாண்மைக் கழகத்தில் தீர்மானம் நிறைவேற்றினர். எனினும் நாட்டாண்மைக் கழகத் தலைவர் திரு. குந்த் "இத்தகைய செயல்களுக்கு நான் பயந்துவிட மாட்டேன். சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் நான் தான்!" என்று கூறுகின்றார்.

●

அதுமட்டுமா?

சென்ற சனவரித் திங்கள் 5-ம் நாள் திருச்சியில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் காங்கிரசுத் தலைவர்கள் எதிர்க் கட்சியை இழிந்த நடையில் வசைபாடியுள்ளார்கள். கொதிப்படைந்த மக்கள் கூச்சலிட்டிருக்கின்றனர். அப்பொழுது அங்கு பேசிய தமிழ் நாட்டுக் காங்கிரசுத் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் "தமிழ் நாட்டில எந்த இடத்திலும ஒரு கூட்டம்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்த முடியாதபடி காங்கிரசுக்காரர்கள் செய்வார்கள்," என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். அரசியல் அரங்கிலே ஆபத்து நிறைந்த—நாகரிகமற்ற வெறியுணர்ச்சியை வளர்த்து விடுகின்ற பணியிலே இன்று ஆளும் கட்சியினர் அக்கரை அதிகம் காட்டுகின்றார்கள் என்பதற்கு இதைவிட சிறந்த சான்று வேறு தேவையில்லை. வண்ணையம்பதி பாண்டியன், நெல்லிக்குப்பம் மஜீத், உடையார்பாளையம் வேலாயுதம், தூத்துக்குடி தாளமுத்து—இவர்களெல்லாம் இது போன்ற அரசியல் அநாகரிக வளர்ச்சிக்கு வித்தூன்றும் வன்னெஞ்சர்களின் பேச்சினால் உயிரிழந்தவர்கள். குடியாட்சிப் பண்புக்கு மரண ஓலை கொடுத்துவிட்டு வன் செயல்களுக்கு வரவேற்பு அளிக்கும் இவர்கள் அரசியல் உலகிலே நல்லவர்களால், நாணயமுடையவர்களால் வெறுத்தொதுக்கப்பட வேண்டியவர்கள்!

●

அடுத்தாற்போல ஆட்சி வண்டியை ஓட்டிச் செல்லும் அமைச்சர்களும், அதிகாரிகளும் எந்த அளவுக்கு குடியாட்சிப் பண்பை பாதுகாத்து வருகிறார்கள் என்பது நம் பார்வைக்கு உரியது. 3—2—1958-ல் வெளிவந்த தேசிய நாளிதழான 'தினமணி' சுவையான செய்தி ஒன்றை வெளியிட்டு, சனநாயகத்துக்கு வழியனுப்பு தந்துவிட்டு சர்வாதிகாரத்துக்கு வரவேற்பு நல்குகின்ற அமைச்சர்களின் பண்பைப் படம் பிடித்துக் காட்டுகிறது:

"மதுரை, பிப்ரவரி—2: திலகர் சதுக்கத்தில் இன்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ், மந்திரிகள் ஸ்ரீமான்கள் சுப்பிரமணியம், பக்தவத்சலம், கக்கன் ஆகியோர் பேசுகையில் சனநாயகக் காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் முதலிய எதிர்க் கட்சிகளை வன்மையாகக் கண்டித்துப் பேசினர். கலகத் தடுப்புப் போலீஸ் படைகள் அரண்போல் நின்று மந்திரிகளுக்குப் பந்தோபஸ்து செய்தனர். சுமார் 15,000 பேர் கொண்ட கூட்டம் வந்திருந்தது. போலீஸ் மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் பேசுகையில் எதிர்க் கட்சிகளை 'பைத்தியக்காரர்கள்', 'காலிகள்', 'கொள்ளைக்காரர்கள்' என்று கடுமையாகத் தாக்கிப் பேசினார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார், எதிர்க் கட்சிகளை ஒடுக்க போலீஸ் படையையும் இராணுவத்தையும்உபயோகிக்கத் தயங்காது என்று மராமத்து மந்திரி ஸ்ரீ கக்கன் வெளிப்படையாகவே கூறினார். தி. மு. க. தேசத் துரோகிகள் என்றார். நிதி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் மிதமான முறையில் எதிர்க் கட்சிகளைத் தாக்கிப் பேசினார். ஆரம்பத்தில் அமைதியாக இருந்த கூட்டத்தினர், மந்திரி ஸ்ரீ. பக்தவத்சலம் பேசுகையில் கூச்சல் போட ஆரம்பித்தனர்......... முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் எதிர்க் கட்சிகளைத் தாக்கிப் பேச ஆரம்பித்ததும் கூட்டத்தினர் கூச்சல் மிக அதிகமாயிற்று. 'பேசாதே' 'பேச்சை நிறுத்து' என்று கூட்டத்தில் கூச்சல்கள் கிளம்பின. குழப்பம் அதிகரித்து மைதானம் ஒரு குட்டிப் போர்க்களம் போலக் காட்சியளித்தது... சிலர் கைது செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டனர்."

—இச்செய்தி கழக நாளிதழ் தருவதல்ல; காங்கிரசுப் பத்திரிகை தருவது. டில்லி எசமானர் பண்டித நேரு தயாரித்துக் கொடுத்த 'தூற்றல் அகராதியை' தெள்ளத்தெளிய கற்று, திறம்பட மனப்பாடம் செய்து மேடையிலே ஒப்புவித்துள்ளார் திரு. பக்தவத்சலனார்.

மக்களாட்சித் தன்மை மரணப் படுக்கையிலே துடிதுடிக்கிறது.

●

இவர்களின் டில்லி மூலவர்—உலகமெலாம் பஞ்ச சீலத்தைப் போதிக்கும், உத்தமர் பண்டித நேரு எந்த அளவுக்கு மக்களாட்சிப் பண்பை மதிக்கின்றார் என்பதை, இங்கிலாந்து பாராளு மன்றத்தில் பேசிய தொழிற் கட்சித் தலைவர் ஒருவரின் பேச்சு தெளிவாக விளக்குகிறது. தொழிற் கட்சி பண்டிதர் மேல் எப்பொழுதும் புகழ் பதிகமும், போற்றல் அகவலும் பாடுகின்ற அட்லியின் கட்சி. அக்கட்சியின் உறுப்பினர் ஜான்மெக்காவான் என்பார் 1957, மே திங்கள் இங்கிலாந்து பாராளு மன்றத்தில் இப்படி குறிப்பிட்டார்:

"இந்திய முதல்வர் நேரு தூரக் கிழக்கு பிராந்தியத்தில் 'டிடடோ'வாக மாற வேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறார். அவருடைய விசேஷத் தூதுவர் திரு. கிருஷ்ண மேனன் இன்றைய சர்வ தேச அரசியலுக்கு ஏற்பட்டுள்ள பேராபாயம்!"

●

இதோ, சென்னையிலிருந்தே மீண்டுமொரு உதாரணம்.

அமைச்சர் திரு. பக்தவத்சலம் அண்மையில் சென்னையில் பேசும்போது "உலகம் போற்றும் உத்தமரான பண்டித நேருவுக்கா கறுப்புக் கொடி?" என்று ஆயாசமும், ஆத்திரமும் கலந்த குரலில் பேசியுள்ளார். இதற்கும் நாம் பதில் சொல்லத் தேவையில்லாத நிலையை 1—2—1958 "குமுதம்" இதழ் ஏற்படுத்தியுள்ளது:

"அமைச்சருடைய கைவசமுள்ள அரசியல் வேதத்தில் பஞ்ச மகா பாவங்களோடு சேர்த்து எண்ணப்பட வேண்டிய ஆறாவது பாகம், பிரதம மந்திரிக்கு எதிராக கருப்புக் கொடி பிடிப்பது போலும்! அதைக் காட்டிலும் பயங்கரமான குற்றம், கூட்டம் போட்டு பிரதம மந்திரியைக் கண்டிப்பதுபோலும்! பிரதம மந்திரியைக் கண்டிப்பது அனுமதிக்கப்படாதென்றால் அபபுறம் தேர்தல் எதற்கு? பேச்சுரிமை எதற்கு? ஓட்டுரிமை எதற்கு? பேச்சுரிமைக்கு உறுதியளிக்கும் அரசியல் சட்டம் எதற்கு? இந்தியக் குடியரசு என்கிற ஆடம்பரப் பெயர்தான் எதற்கு?"

—என்று 'குமுதம்' வினவுகிறது. குடியாட்சிப் பண்புக்கு உலைவைக்கும் 'குணாளர்களை'ப் பார்த்து!

●

குடியரசு தின விழாவின் போது திருவல்லிக்கேணி கடல் மணற் பரப்பில் அமைச்சர்கள் அனைவரும் ஒரு சேர நின்று நமது கழகத்தின்மேல் வசைமாரி பொழிந்துள்ளார்கள். தேசிய நாளிதழான 'நவ இந்தியா'வே மந்திரிகள் பேச்சில் 'விஷமும் வெறுப்பும்' கொட்டியதென்று கூறுகிறது. தனிநபர் வழிபாடும், சர்வாதிகாரமும் நாட்டிலே தலைவிரித்தாடுகிறது. ஆட்சிக் கொலுவில் வீற்றிருப்போருக்கு என்றும் அது சாசுவதமல்ல. பதவியும் சாகாவரம் பெற்றதல்ல. இதை உணர்ந்திருந்த வேண்டும். "அரசியல வாழ்வு ஒரு மணல் மேடு. உச்சியில ஏறுவது கடினம்; பெற்ற இடத்தைக் காப்பாற்றிக்கொள்வது சுலபமல்ல. உயரமான இடத்திலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம். ஆனந்தமாகக் கூட இருக்கும். ஆனால் சிறிது கால் வழுக்கிச் சாய்ந்தாலோ உச்சியிலிருந்து உருள நேரும்! விளைவு சாதாரணமாயிருக்காது" என்ற அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரையை ஆள்வோர்க்கும், அவர் சார்ந்துள்ள கட்சியினர்க்கும் கூறி, குடியாட்சிப் பண்பை காப்பாற்ற வேண்டுகிறோம்.

—"அன்னம்"

விசாரணை தேவை!

"உங்கள் ஆட்சியில் எதைக் காட்ட முடிகிறது? திட்ட வளர்ச்சியைக் காட்டுகிறீர்களா? அணைகளைக் காட்டுகிறீர்களா? தொழிற்சாலைகளைக் காட்டுகிறீர்களா? பள்ளிகளைக் காட்டுகிறீர்களா?

"ஒவ்வொரு முறையும் சபைக் கூடும்போது பிணக் குவியல்களைத்தானே காட்டுகிறீர்கள்? அன்று முதுகுளத்தூர்—இன்று சென்னை!

"உஙகள் கரங்களில் இரத்தக்கரை படிந்துள்ளது.

"நீங்கள் போலீஸ் ஆட்சி நடத்துகிறீர்கள்—ஜனநாயக ஆட்சி நடத்தவில்லை. இந்த மாகபோக, நீதி பூர்வ விசாரணை வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன.

"கறுப்புக் கொடி காட்டுவது பலாத்காரத்தைத் தூண்டுவது" என்று அமைச்சர் குற்றம் சாட்டினார.

"நான் கேட்க விரும்புகிறேன்—எந்தக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் பலாத்காரம் தலைகாட்டியது?

—சட்ட மன்றத்தில் அறிஞர் அண்ணா.

எட்டணாத் திருடன்

ரசிலா, இன்ஜினியர் பாபு ஜகத்ராம்சிங் வீட்டு வேலைக்காரன். மாதத்திற்கு பத்து ரூபாய் சம்பளம். அவன் கிராமத்தில் அவனுடைய வயதான தகப்பனாரும், இளம் மனைவியும், ஒரு பெண்ணும், ஒரு குழந்தையும தனியாக வசித்து வந்தார்கள். இவர்களையெல்லாம் காப்பாற்றும் பொறுப்பு ரசிலாவின் தலையில விழுந்ததால் அவன் நகரத்திற்கு வந்து வேலை செய்தான். ரசிலா தன் சம்பளத்தில் தனக்கென்று காலணு கூட எடுத்துக் கொள்ளாமல் அவ்வளவையும் ஊருக்கு அனுப்பி விடுவான். ஆனாலும் அவன் மனைவி, குழந்தைகள், தங்களுக்கு அப் பணம் போதவில்லை என்றும், இன்னும் கொஞ்சம் அதிகமாக அனுப்பு என்றும் ஒவ்வொரு மாதமும் கடிதாசி எழுதினார்கள். ஆனல் அவன் என்ன செய்வான்? தன் எஜமானனை இன்ஜினியரிடம் பல முறை தன் சம்பளத்தை உயர்த்தும்படி வேண்டினான். அவர் கண்டிப்பாக பத்து ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார். "உனக்கு இந்த சம்பளத்தில் இங்கு வேலை செய்ய விருப்பமிருந்தால் இரு. இல்லா விட்டால் போய்விடு. நீ இல்லா விட்டால் வேறு ஆளே இல்லை என்று நினைத்தாயா?" என்று கூறவே ரசிலா வாயை மூடிக் கொண்டான். அவனுக்கு இதை விட்டு வேறு இடத்தில் போய் வேலை செய்யவும் பிடிக்க வில்லை. இந்த வீட்டிற்கு வந்து எட்டு வருடமாகிறது. இது வரையில் அவனை அவ் விட்டார் ஒரு பேச்சு சொன்ன தில்லை. அவனும் கண்ணியமாக நடந்து கொண்டிருக்கிறான். எனவே அங்கேயே வேலையில் இருப்பது என்று நிச்சயித்துக் கொண்டான்.

இன்ஜினியர் பங்களாவிற்கு பக்கத்து பங்களாவில் அவ்வூர் மாஜிஸ்டிரேட் வசித்து வந்தார்; அவ்வீட்டு காவல்காரன் மியான் ரம்சான் ரசிலாவின் நண்பன். இருவரும் நண்பர்களாய் மிக நெருங்கிப் பழகினார்கள். ரம்சானின் எஜமானர் அவனுக்குப் பழங்களைச் சாப்பிடக் கொடுத்தால், அதில் சிலவற்றை ரசிலாவுக்கும் பகிர்ந்து கொடுப்பான். அப்படியே, தன் எஜமானர் தனக்குக் கொடுக்கும் சிற்றுண்டிகளில் கொஞ்சம் ரம்சானுக்கும் கொடுப்பான் ரசிலா. இரவில் இருவரும் வெகு நேரம்வரை ஒன்றாக உட்கார்ந்து பேசுவார்கள்; புகை பிடிப்பார்கள்; அல்லது வெற்றிலைப் போடுவார்கள். எனவே இவர்களின் நட்பில் இருந்த ஆனந்தம் வேறு எதிலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இருவரும் ஏழ்மையில் வாடுபவர்கள்; இருவர் மனதிலும் உள்ளதை வெளியிட்டு தங்கள் துக்கத்தை ஆற்றிக் கொள்வார்கள். சில சமயங்களில் அவர்களிருவருக்கும் மனவேற்றுமை உண்டாகி சண்டை நடக்கும். எப்படி தையற்காரனின் கத்திரிக் கோல் துணியை நறுக்குமோ அப்படி அவர்களின் நாக்கு பேசும். இரவு வந்தவுடன் அவர்களின் சண்டை, மனக் கசப்பு யாவும் மறைந்து சுமுகமாகிவிடுவார்கள், தையற்காரன் தான் கத்தரித்த துணியை தைத்துவிடுவது போல! அவர்களின் மனக் கசப்பு நீர்மேல் ஏற்படும் குமிழி போல. குமிழி ஏற்படுவதால் தண்ணீருக்கு எந்த அபாயமும் ஏற்படுவதில்லை. அதற்கு மாறாக அழகுதான் உண்டாகிறது.

2

ஒருநாள் ரசிலா துக்கத்துடன் இருப்பதைப் பார்த்து "நண்பனே! ஏன் கவலை?" என்று கேட்டான் ரம்சான்!

ரசிலா தன்னுடைய துக்கத்தை மறைக்கப் பார்த்தான். எனவே, "நான் துக்கப்படுகிறேனா? அப்படியா உன் கண்ணிற்குத் தெரிகிறது?" என்றான் சிரித்தபடி.

"இல்லை! நீ என்னிடம் எதையோ மறைக்கிறாய்!"

"சகோதரனே! இதுவரையில் நான் ஒரு விஷயத்தையும் மறைத்ததில்லை!"

"ஆனல் இப்பொழுது மறைக்கப் பார்க்கிறாய்; அதுதான் உன் முகம் எடுத்துக் காட்டுகிறதே!"

ரசிலாவின் இதயம் துக்கமடைந்திருந்தது. இருந்தாலும் அதை மறைக்க உதட்டில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டே, "நீ சொல்வது சரியல்ல!" என்றான்.

"பின் என்ன விஷயம்? சொல்லேன்!"

ரசிலாவின் வாயிலிருந்து வார்த்தை ஒன்றும் வெளிவர வில்லை. சொல்லலாமா வேண்டாமா என்று எண்ணிக் கொண்டே, வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

"ஏன்? சொல்லமாட்டாயா?"

ரசிலா மெள்ள மெள்ள தன் தலையை உயர்த்திக் கொண்டே, "நான் சொல்வதைக் கேட்டு நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று வினவினான்.

"நீ பிறரிடம் உன் மனதிலுள்ளதைச் சொன்னால் உன் மனதிலுள்ள பாரம் குறையுமே என்பதற்காகத்தான் நான் கேட்டேன்!"

மறுபடி ரசிலா தலையைக் கவிழ்த்துக் கொண்டு யோசித்தான். உள்ளத்தில் இருப்பதை சொல்லாமலும் இருக்க முடியவில்லை. தன் ஆருயிர் நண்பன் எதிரே நின்று கொண்டு கேட்கும்போது எப்படி சொல்லாமல் தப்பிப்பது? கடைசியில் பெருமூச்சு விட்டுக் கொண்டே ரசிலா கூறினான்:

"ஊரிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. குழந்தைக்குக் காய்ச்சலாம். பணமில்லையாம."

"அப்படியானல் இதைச் சொல்லி உடனே உன் எஜமானரிடம் பணம் கேள். தருவார்!"

"கேட்பேன். ஆனல் கொடுக்க மாட்டார்!"

"என்ன சொன்னார்?"

"யாருக்கு என்னவானாலும் நான் காலணா கொடுக்க முடியாது என்று என் எஜமானர் கூறிவிட்டார். ஊரில் அவர்கள் பணமில்லாமல் குழந்தையை வைத்துக் கொண்டு திண்டாட, நான் இங்கே என் நிலையை நினைத்துக் கொண்டு நொந்து அழ வேண்டியிருக்கிறது. அவர்களுடைய நிலைமை இப்பொழுது எப்படியிருக்கிறதோ? கொஞ்சமாவது பணம் அனுப்பி வைத்தால் அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்."

இதைக் கேட்டு ரம்சான் பேசாமலிருக்கவில்லை. உடனே, "உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்றான்.

அதைக் கேட்டு ஆச்சரியப் பட்டான் ரசிலா. அவனுக்கு நம்பிக்கையின் ஒளி மனதில் தென்பட்டது. "இந்தக் கஷ்டத்தில் தற்சமயம் உதவ ஐந்து ரூபாய்கள் கொடுத்தாயானல் அதுவே எனக்கு ஐந்து மோகராக்கள் கொடுத்ததுபோல் நினைத்துக் கொள்வேன்," என்றான் ரசிலா.

"கொஞ்சம் உட்கார்ந்திரு" என்று கூறிவிட்டு ரம்சான் தன் வீட்டிற்குச் சென்றான். சிறிது நேரத்தில் ஐந்து ரூபாய் கொணர்ந்து ரசிலாவின் கையில் கொடுத்தான். ரசிலா ஒரு வார்த்தைகூட பேசவில்லை. அவன் மகிழ்ச்சியின் எல்லையில் இருந்ததால் அவனால் பேச முடியவில்லை. ஆனந்தத்தினால் நனைந்த தன் புருவங்களை ஒரு முறை உயர்த்திப் பார்த்து குனிந்து கொண்டான். தன் எஜமானரையும், ரம்சானையும் ஒரே தட்டில் நிறுத்திப் பார்த்தான் மனதில். தன் எஜமானரிடம் பணம் நிறைய இருக்கிறது. தன்னை நம்பி எட்டு வருடமாகமாடாக அவ்வீட்டில் உழைத்த தனக்கு ஐந்து ரூபாய் கொடுத்தால் என்ன குடியா முழுகி விடும்? அவன் அந்த ரூபாயை எடுத்துக் கொண்டு ஊரை விட்டா ஓடிப் போகப் போகிறான்? ரம்சான் தன்னைப்போல ஏழை. அவன் இன்றைக் கெல்லாம் கஷ்டப் பட்டு சேகரித்த பணம் இருபது அல்லது இருபத்தி ஐந்துதானிருக்கும். ஆனாலும் என்னுடைய துக்கத்தைக் கேட்டவுடனே எனக்கு கடன் கொடுத்து உதவினான். அவனுக்கு நான் எவ்வகையில் பிரதி உபகாரம் செய்வேன்?

3

பல மாதங்கள் உருண்டோடின. ரசிலாவின் குழந்தைக்கு உடம்பு சரியாகி விட்டது. அவன் கொஞ்சம் கொஞ்சமாக பணம் சேகரித்து ரூபாய் நாலரை வரையில் ரமசானுக்குக் கொடுத்து விட்டான். இன்னும் அரை ரூபாய்தான் பாக்கியிருந்தது. ஆனாலும் அவன் முழு மனதுடன் ரம்சானுடன் பேசுவதில்லை. அவன் வீட்டிற்குப்போய் பேசவும் விரும்ப வில்லை. அவனிடம் கடன் வாங்கி இன்னும் கொடுக்காமல் இருக்கிறோமே என்ற வேதனையால் தான் ரசிலா தன் நண்பனிடம் முன்னைப்போல் நடந்து கொள்ளவில்லை.

ஒருநாள், இரவு மணி பனிரெண்டு இருக்கும். ரம்சானைப் பார்த்து விட்டு வரலாம் என்று அவன் இல்லத்திற்குச் சென்றான் ரசிலா. ஆனல் ரம்சான் வீட்டில் இல்லை. எனவே பேசாமல் தன்னிருக்கைக்கு வந்தான். குளிக்கும் அறைப் பக்கம் உட்கார்ந்து புகை பிடிக்க ஆரம்பித்தான். குளிக்கும் அறைக்குப் பக்கத்து அறைதான் லாலா ஜகத்ராம் சிங்கின் அறையாகும். அந்த அறையில் யாரோ இருவர் பேசிக் கொள்வது, புகை பிடித்துக் கொண்டு வெளியே உட்கார்ந்திருந்த ரசிலாவின் காதுகளில் விழுந்தது. மெள்ள எழுந்து சுவர்ப் பக்கம் சென்று யார், என்ன பேசுகிறார்கள் என்பதை ஒட்டுக் கேட்கலானான். அவனுடைய எஜமானனை லாலா ஜகத்ராம் சிங்தான் வேறு யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் பேசுவது அவ்வளவும் ரசிலாவின் காதுகளில் விழவில்லை. ஒன்றிரண்டு வார்த்தைகள் தான் தெளிவாக விழுந்தன. யாரோ ஒரு மனிதர் தன் எஜமானருக்கு லஞ்சம் கொடுக்க வந்திருக்கிறார் என்பதை அவர்கள் பேச்சிலிருந்து அறிந்து கொண்டான். எனவே இன்னும் உன்னிப்பாக கேட்க ஆரம்பித்தான்.

"நீங்கள் எனக்கு எவ்வளவு கொடுப்பீர்கள்?"

"ஐந்நூறு ரூபாய் தருகிறேன்!"

"இவ்வளவு சிறிய தொகையெல்லாம் நான் வாங்குவதில்லை. இது எனக்கு அவமானம்!"

"நான் தங்களுடைய சேவகன். இந்த ரூபாயை நான்

[தொடர்ச்சி பக்கம்–3]

சென்ற இதழில்

பீதாம்பர பாகவதரின் சுயரூபத்தைப் புரிந்து கொண்ட மைனா. வீட்டைவிட்டுப் புறப்பட்டு சமயபுரம் வந்து விடுகிறாள். பூனை பின் தொடர.

தன் சோகக் கதையை சொல்லி முடித்தாள் மைனா. தனிமரமாக நின்ற அவளுக்கு ஆதரவும் வாழ்வும் தருவதாக தீச்சட்டி சிங்காரம் உறுதி தருகிறான். இரவு மைனாவின் வீட்டிலேயே இருந்துவிட்டு, சிற்றூர் சென்று இரண்டு நாட்களில் திரும்பி, தனிக்குடித்தனம் அமைக்கலாம் — என்று சொல்லிச் செல்கிறான்.

அவன் சென்றபிறகு சற்றும் எதிர்பாராத வண்ணம் பீதாம்பர பாகவதர் மைனாவின் வீட்டுக்கு வருகிறார். மைனா செய்வதறியாது திகைத்து நிற்கையில் அவர் உரிமையோடு உள்ளே நுழைந்து. சாப்பிடவும் தொடங்குகிறார். உணவில் உப்பிடும்படி மைனாவை வேண்ட கடுகடுங்கிக் கொண்டிருந்த மைனாவின் கைகள் உப்புப் பாத்திரத்தையே உணவில் கொட்டிவிடுகிறது.

5

"இதைக்கூட நான் சாப்பிடக்கூடாது என்றுதானே உப்பைக் கொட்டிவிட்டாய்? பரவாயில்லை —'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்று பழமொழி—நான் எப்போதும் உன்னை நினைத்துக் கொண்டேயிருப்பேன்" என்று குத்தலாகவும் குறும்பாகவும் பீதாம்பரம் பேசிக் கொண்டே போனார். இந்த இக்கட்டான நிலைமையை எப்படி சமாளிப்பதென்றே மைனாவுக்குப் புரியவில்லை.

"ஏன் ஒரு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய்? எத்தனையோ நாட்களுக்குப் பிறகு கணவன் வந்திருக்கிறேன்; வாயெல்லாம் பல்லாக என்னை வரவேற்க வேண்டாமோ?" என்றார் பீதாம்பரம்.

அதற்கு அவள், அவனையறியாமலே வெடுக்கென்று பதில் கூறிவிட்டாள்.

"வாயிலே பல் இருந்தாவுல்ல அப்படி வரவேற்கலாம்!" என்று!

பீதாம்பரம், அவள் நினைப்பதைப் புரிந்து கொண்டார். ஆனாலும் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல் "உனக்கா பல் இல்லை? அடுக்கு முல்லை போல அழகாக இருக்கிறதே!" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

"இதெல்லாம் போலிப் பல்! ஊரை ஏமாற்றுவதற்காகக் கடையிலே வாங்கியது!" என்றாள். மைனா—கோபமாக! எப்படியோ அவள் பேச ஆரம்பித்தால் போதும் என்று எதிர்பார்த்த பீதாம்பரம் மகிழ்ச்சியடைந்தார். இருவரிடையே உரையாடல் வளரலாயிற்று.

"நீ நளாயினி நாடகம் பார்த்திருக்கிறாயா மைனா?"

"இல்லை—நான் அல்லி அர்ச்சுனா நாடகம் மட்டுமே பார்த்து ஏமாந்திருக்கிறேன்!"

"அல்லி அர்ச்சுனா காதல் கதை! நளாயினிதான் உண்மையான பதி பக்தியை விளக்கும் கதை!"

"நீங்கள் வள்ளித் திருமணம் நாடகம் நடத்தியிருக்கிங்களா?"

"இல்லை..."

"பொய் சொல்றீங்க! நீங்கதான் வள்ளித் திருமணம் நாடகத்தை தலைகீழே நடத்தியிருக்கீங்களே?"

"தலைகீழவா? எப்போது? எங்கே?"

"எப்போதா? மறந்தா விட்டீங்க? உங்க வாழ்க்கையில தான் நடத்தியிருக்கீங்க. பழைய வள்ளித்திருமணத்திலே வேலன் விருத்தனா வருவான். நீங்க நடத்தினதிலே விருத்தன், வேலனா வந்திருக்கான் — இல்லியா?"

"மைனா! முருகப் பெருமான், வள்ளியை நேரடியாக வந்து திருமணம் செய்து கொள்ளாமல் விருத்தனைப போல வேஷம் போட்டு வந்தானே; எதற்காக? மனித வாழ்வின் உண்மையை விளக்கும் தத்துவமாக்கும் அது! வாலிபம் என்றைக்குமிருக்காது — ஒரு நாளைக்கு மனிதனைக் கிழட்டுத்தனம் சூழ்ந்து கொள்ளும் என்பதை எடுத்துக் காட்டி வள்ளியின் மனசை உறுதிப்படுத்துவதற்காகவே விருத்தன் வேடம்!"

"என்னைக்காவது ஒருநாள் வாலிபம் மறையத்தானே போகுதுன்னு நினைச்சு வள்ளி அந்த முருகனைக் கிழவனாகவே இருக்கச் சொல்லவில்லையே—வாலிபனாக வந்த பிறகுதானே கல்யாணம் செய்து கொண்டாள்!"

"அவர் கடவுள் — அதனால் விருத்தன், வேலனாக மாறிவிட்டார்!"

"அப்படின்னா கடவுள் கதையைச் சொல்லி சாதாரண மனுஷாளுக்கு உதாரணம் காட்டாதீங்க!"

"சுற்றி வளைப்பானேன்... மைனா—நீ சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்ததற்குக் காரணம் என்ன?"

"இதை நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்து கொண்டிருக்க வேணும்!"

"நீதான் எனக்குக் கடிதம் எழுதினாய். என்மீது ஆசை கொண்டுவிட்டதாகவும் அதை மாற்றிக் கொள்ள முடியாதென்றும் கெஞ்சியிருந்தாய். உன் படத்தை வேறு அனுப்பி என்னை மயக்கினாய். உன் இஷ்டப்படி கல்யாணம் நடந்த பிறகு ஓடிவந்து விடுவதென்றால் இது நியாயமா?"

"பசும்புல் தரையென்று நினைச்சு, படுகுழியிலே விழுந்த யானை எப்படியாவது தப்பிக்க மாட்டோமான்னுதானே தவிக்குது! அது மாதிரிதான் என் கதையும்!"

"மைனா! உன் கழுத்திலே கிடக்கிற மாங்கல்யத்துக்காவது மதிப்பு கொடுத்துப் பேசு. நான் மானம் அவமானத்தை விட்டுட்டு உனக்கிட்ட பிச்சை கேட்க வந்திருக்கிறேன். பீதாம்பரமென்றால் ஊரெல்லாம் பேரு — புகழ்! அதைக் கெடுத்துவிடாதே! பீதாம்பரம் பெண்சாதி, யாருடனோ ஓடிவிட்டாள் என்று ஊர ஜனங்கள் பேசினால் அதைவிட நான் தூக்கு மாட்டிக் கொண்டு செத்துப் போகலாம்!"

"மன்னிச்சுக்கிங்க! என்னை மறந்துடுங்க!"

"முடியவே முடியாது! உன்னை என்னால் மறக்கவே முடியாது! பாலைவனமாக இருந்த என்னுடைய நாடகவாழ்க்கையிலே எத்தனையோ புயல் வீசியிருக்கு! எத்தனையோ தடவை வாழ்க்கையை நினைத்து நினைத்து அழுது புலம்பியிருக்கேன். ஆனால் அது எல்லாம் மறந்து போகிற அளவுக்கு உனக்கும் எனக்கும் கல்யாணம் நடந்தது. மைனா! திருமணத்தன்று நீ மகிழ்ச்சியாகத்தான் இருந்திருப்பாய். ஏனென்றால் அப்போதெல்லாம் நீ என்னை மன்மதன் என்றல்லவா நினைத்துக்கொண்டிருக்கிறாய்! உன் மகிழ்ச்சியெல்லாம் அப்போது நான் கொண்ட மகிழ்ச்சியோடு போட்டி போட்டிருக்கவே முடியாது! எட்டாத பழம் நொண்டிக்குக் கிடைத்துவிட்டது என்று பெருமைப்பட்டுக் கொண்டேன். எப்படியும் விஷயம் வெளிச்சமாகி விடும்—பிறகு நீயும் என்ன இருந்தாலும் நம் கணவர்தானே என்று

மார்ச் முதல் நாள்
கிடைக்கும்!

சத்தான கருத்துகள் -
வித்தகர் பேருரைகள் நிறைந்த
இலக்கியப் பேரிதழ்
சிறந்த அமைப்பதுடனும்,
புதிய மெருகுடனும் வெளிவருகிறது!

முத்தாரம்

★ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓவியங்கள்!
★ சிந்தைக்கு விருந்தளிக்கும் சிறு கதைகள்!
★ அனைத்திலும் புதுமைமிக்கதாய் இனிமைகொண்டதாய்
★ எழில் துலக்கும் தமிழ்க் கருவூலமாய்த் தயாராகிறது!

இன்றே விற்பனையாளரிடம் உங்கள்
பிரதிக்குச் சொல்லிவையுங்கள்!

சமாதானமாகிவிடுவாய் என்று ஒரு நம்பிக்கையிருந்தது எனக்கு. அந்த நம்பிக்கையிலும் ஆனந்தத்திலும் மண்ணைப் போட்டு விட்டாய் இப்போது!"

"என்னைக் குற்றவாளியாக்கி நீங்கள் தப்பித்துககொள்ளப் பாக்கிறீங்களா? நீங்களும் முன்னொரு காலத்திலே நல்ல வாலிபரா இருந்திருப்பீங்களே; அதை நினைச்சுப்பாருங்க! வெட்கத்தை விட்டுவிட்டுக் கேக்கிறேன்— அதைப் போல இள வயசுக்கார ஒரு பெண்ணுக்கு என்னென்ன எண்ணங்கள் தோணும்! அதுக்கெல்லாம் நீங்க தகுதியானவர் தானா? யோசித்துச் சொல்லுங்க!"

"யோசிப்பதென்ன? குருடனுக்கிட்ட கேட்டாலும் நான் தகுதியல்ல என்றுதான் சொல்லுவான், மைனா! தகுதி—தரம்—இசெல்லாம்பற்றிப் பேசி உன்னை இணங்க வைக்க வரவில்லை நான்! என்னை நீயேவந்து கல்யாணம் செய்துகொண்டாய். நீயே இப்போது கைவிட்டு விட்டாய்! இது நியாயமா—என்றுதான் உன்னிடம் மன்றாடிக் கேட்டு மீண்டும் உன்னை அழைத்துப் போக வந்திருக்கிறேன்!"

"எனக்கும் உங்களுக்கும் கல்யாணம் என்று ஒரு நிகழ்ச்சியே நடக்கலேன்னு நினைச்சுக்கிட்டு இருந்துடுங்க!"

"மருந்து சாப்பிடும்போது குரங்கை நினைத்துக் கொள்ளாதே யென்று யாரோ ஒரு மருத்துவன் சொன்னானும்; அதுபோல்தானிருக்கிறது இதுவும்!"

"வீணாப் பேசிகிட்டு இருக்கிறதிலே என்ன பிரயோஜனம்?"

"அதான்நானும் சொல்றேன்; உடனே என்னோடு புறப்படு!"

"முடியாது! முடியாது! என் உயிர் போனாலும் சரி; உங்களோட இனி வாழ முடியாது!"

"வாழ வேண்டாம்! சும்மா என் வீட்டிலே வந்து இரு. ஊர் வாயையாவது மூடுவதற்கு உதவியாக இருக்கட்டும்."

"இதுவரைக்கும் ஊர்வாய், அடங்கியா இருக்கும்? இந்நேரம் என்னைப்பத்தி எவ்வளவோ பேசியிருப்பாங்க. இனிமேல் தானா பேசப் போறாங்க!"

"நீ சிங்காநல்லூருக்குப் போயிருக்கிறாய் என்றுதான் ஊரிலே பிரஸ்தாபம்! கல்யாணம் பண்ணின நேரம் நல்ல நேரம் இல்லை. அதனால் சொந்த ஊருக்குப் போய்விட்டு ரெண்டு மாசம் கழித்து வருவாய் என்றுதான் கேட்டவருக்கெல்லாம் சொல்லி வைத்திருக்கிறேன்!"

"நான் சொல்றதைக் கேளுங்க. புருஷனோடு வாழ திருப்தியில்லேன்னு மனைவி சொல்லும்போது, மேலும் மேலும் பிடிவாதம் பண்றதிலே என்னங்க லாபம்?"

"திருப்தியோடு வாழ வேண்டாம். அதிருப்தியோடு வாழு! எப்படியோ நீ என் வீட்டிலே இருந்தா போதும்!"

"பொம்மை மாதிரி உங்க வீட்ல இருக்கணுமா?"

"ராணி மாதிரி இரு!"

"பிராணி மாதிரிதான் இருக்கலாம்! பிராணிக்குக்கூட என்னைப் போல கஷ்டகாலம் வராது!"

எதிர்பார்த்த ஏடுகள் தயாராகிவிட்டன!

★ அழகு தமிழ்ப் பூக்காடு! அரசியல் விளக்க ஏடு!

★ உரிமை முரசு கொட்டும் உன்னத நாடகம்!

மு. கருணாநிதியின்

உதய சூரியன்

விலை ரூ. 1—50

★ உணர்ச்சி மிக்க காவியம்! உன்னதமான ஓவியம்!

★ தென்னக மேடைக்கோர் புதிய படைப்பு!

பி. சி. கணேசன் எழுதிய

எழுத்தாளன் காதலி (நாடகம்)

விலை ரூ. 1—25

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை சாலை, திருச்சி-8.

[தனிப் புத்தகம் வேண்டுவோர், புத்தக விலையுடன் 25 புதிய காசு சேர்த்தனுப்புக.]

"உன்னை எங்க வீட்டு எஜமானி மாதிரி நடத்துறோம். என்னை உன் அடிமை மாதிரியே நடத்து! இதைவிட நான் இன்னும் என்னசொல்றது மைனா?"

"வீட்ல வந்து எல்லாவற்றையும் ஆட்டிப் படைச்சு அரசாட்சி பண்ணனும்னு நினைக்கிறேன்? பிச்சைக்காரியா திரிவேன்—உங்க வீட்டு வேலைக்காரியாக்கூட இருப்பேன் - ஆனா மனசுக்குத் திருப்தியில்லாம எதுக்காக எனக்கு எஜமானி உத்தியோகம்?"

"உன் மனசுக்குத் திருப்தியாத்தானே இருக்கணும். இதோ இப்பவே சத்தியம் செய்து கொடுக்கிறேன். என் குலதெய்வத்தின்மேல் ஆணை! என் தொழில்மீது ஆணை! உன்னை நான் தொடுவதே இல்லை. என் மகளைப் போலவே நடத்துகிறேன். போதுமா?"

"மகளைப் போல நடத்துவது உண்மையானால், இப்போதே என்னை மகளைப் போல நடத்துங்கள். மகளுக்குக் கல்யாணமாகி மாப்பிள்ளை வீட்டுக்கு வந்திருக்கிறாள்- அப்பா-நீங்கள் மகளைப் பார்க்க வந்திருக்கிறீர்கள் என்று கற்பனை செய்துகிட்டு, நீங்க மாத்திரம் ஊருக்குப் போங்க!"

"மைனா! நீ என் மகள்தான்—என்னை மன்னித்துவிடு!"

மைனா, சற்றும் எதிர்பாராத நிலையில் பீதாம்பரம் அவள் காலில் விழுந்துவிட்டார். அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மீண்டும் அசைவற்றுப் போனாள். பீதாம்பரம் தன் காலில் விழுந்து கெஞ்சுவதாகவே அவளுக்குத் தோன்றவில்லை. தன் கணவன் பயங்கர விசுவரூபம் எடுத்து, காய்ச்சிய இரும்பாலான கரத்தால் தன்னை அலக்காகத் தூக்கி நரநரவென்று பிழிவது போலவும், தன் விலா எலும்புகள் நொறுங்கி, இருதயம் நசுங்கி, ரத்தம் பீறிட்டெழுவது போலவும் அவளுக்குத் தோன்றியது. அவன் அவளை அடித்திருக்கலாம். வெட்டியிருக்கலாம். மண்டையை உடைத்திருக்கலாம். அதையெல்லாங்கூட அவளால் தாங்கிக் கொண்டிருந்திருக்கக் கூடும். காலடியில் அவன் சுருண்டு கிடப்பதை அவளால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. கண்ணீர் அவளையறியாது பெருகிற்று. மெல்லிய குரலில் "எழுந்திருங்கள்!" அன்று அவரது தோள்பட்டையைப் பிடித்துத் தூக்கினாள்.

"உண்மைதான் மைனா! உன்னை என் மகளாகவே நடத்துவேன். நம்முடைய கல்யாணத்தை மறக்கச் சொன்னயே; நிச்சயம் மறந்துவிடுகிறேன். நீயும் மறந்துவிடு. மகளும் தந்தையுமாக வாழ்வோம். இன்னும் சொல்கிறேன்; மகளே! உனக்கேற்ற ஒரு வாலிபனையும் திருமணம் செய்து வைக்கிறேன்!"

அழுதபடி பீதாம்பரம் இதைச் சொல்லி முடிப்பதற்குள், மைனா அவரது கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு "அய்யோ! என்னை மன்னித்து விடுங்கள்; இப்படியெல்லாம் சொல்லாதீர்கள்!" என்று கதறித் துடித்தாள். பீதாம்பரத்தின் முகத்தைப் பார்க்கவே இப்போது அவள் அஞ்சி நடுங்கினாள். தன்னை உயிரோடு வைத்து அணு அணுவாகச் சித்திரவதை செய்யும் பேய் என்று யாரைக் கருதினாளோ; அந்தப் பேய் அவள் எதிரே நின்று கெஞ்சும் தோரணையில் அவள் உயிரை யாசிப்பதுபோல் ஒரு சமயம் தோன்றியது! அடுத்த கணம்; அன்பின் அரவணைப்பில் அந்தப் பேயை அறியாமலே அதன் கொடிய கூரிய நகங்கள் அவள் நெஞ்சைக் கிழித்து இருதயத்தைப் பொத்தலாக்கி விட்டதுபோலவும் இருந்தது. முதல் நாள் இரவு அவள் உள்ளம், உடல் எல்லாம் பாழ்பட்டு விட்டதை எண்ணிக் கொண்டாள். வியர்வை கொட்டியது. மீளாத பாபக் குழியில் விழுந்து விட்டோம் என்ற ஒரு பயஉணர்ச்சி மேலும் அவளை ஆட்டிப்படைத்தது. பித்தம் கொண்டவள் போல் ஆனாள்.

"என்னைத் தொடாதீர்கள்—நான் பாபி—நான் பாபி!" என்று கத்தினாள்.

"மைனா! மைனா!" பீதாம்பரம் அழைத்தார்.

மைனா, வெறி கொண்டவள் போல ஓடத் தொடங்கினாள். பீதாம்பரம் பின் தொடர்ந்தார். ஆனால் அவரது பருவம், அவள் ஓட்டத்தைத் தடுக்க உதவி செய்யவில்லை. மைனா, நேராகக் கோயில் நிர்வாகி வீட்டுக்குள் ஓடினாள். அங்கே நிர்வாகி மட்டுமே இருந்தார். "நீச்சட்டி சிங்காரம் இருக்கிறாரா?" என்று பரபரப்போடு கேட்டாள். நிர்வாகி, ஒரு விநாடி தாமதித்தார், பதில் சொல்லி பிறகு அவர், "சிங்காரம்தானே? உள்ளேயிருக்கிறார்!" என்று கூறினார். மைனா வீட்டுக்குள்ளே ஓடினாள். வீட்டுக்குள் யாருமே காணப்படவில்லை. ஒரே அமைதியாக இருந்தது. திரும்பி வாயிற்புறம் ஓடிவந்தாள். வாயிற்கதவு தாள் போடப்பட்டிருந்தது. எப்படி வெளியே போவது? விழித்தாள்! கடகடவென சிரித்துக் கொண்டே, கோயில் நிர்வாகி அவளை நெருங்கினார். மைனா, பெருத்த கூச்சல் போட்டாள்.

அந்தக் கூச்சல் யார் காதிலும் விழவில்லை. நிர்வாகியின் கைகளில் மைனா சிக்கினாள். எத்தனையோ நாளாக நிர்வாகியின் நெஞ்சில் மூண்டுகொண்டிருந்த நெருப்பு அப்போதுதான் அணைந்தது. மூன்றாவது முறையாக அவள் கற்பு களங்கப்படுத்தப்பட்டது!

தொடரும்

இராமநாதபுரம் மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

பிப்ரவரி 22, 23 (சனி, ஞாயிறு) நாட்களில்
தேவகோட்டை --- வள்ளுவர் திடலில்
மஜீது அரங்கில் நடைபெறும்.

★

தலைவர் :
க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ.

திறப்பாளர் :
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். இராசேந்திரன்

அறிஞர் **அண்ணா,**
நாவலர் **நெடுஞ்செழியன்**
மற்றம் முன்னணித் தோழர்கள் கலந்து கொள்வர்.

முதல் நாள் :	இரண்டாம் நாள் :
22-2-58 சனி இரவு தோழர் மு. கருணாநிதி நடிப்பதும், புதுமை நாடக மன்றத்தார் அளிப்பதுமான **'உதய சூரியன்'** நாடகம்	**23-2-58** ஞாயிறு இரவு தோழர் **நாகூர் அனிபா** குழுவினருடன் இசைவிருந்து

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம் :
ரூ. **5, 3, 2.** பெண்களுக்கு அணா **8.**

இ. ல. ம. சவுந்தரபாண்டியன்,
வ. கு. தலைவர்

இராம. வெள்ளையன்,
மா. குருசாமி,
செயலாளர்கள்

நவமார்க்கண்டேயன்—பொருளாளர்

எட்டணாத் திருடன்...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

கொடுப்பதாக நினைக்காதீர்கள். தங்களுடைய வெற்றிலைப் பாக்கு செலவுக்கு கொடுப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். தாங்களதான் என்னை மன்னித்து விடுதலையளிக்க வேண்டும்.

லாலா ஜகத்ராம்சிங் கம்பீரமானத் தொண்டையில், "நீ இவ்வளவு சொல்கிறாய் என்பதற்காக இதை எடுத்துக் கொள்கிறேன்," என்றார்.

ரசிலாவுக்கு இந்த உரையாடலினால் ஏதோ புரிந்தன. புரியாத உண்மைகளும் இருந்தன. ஆனால் இவர்கள் பேசிக் கொண்டதின் உள்ளர்த்தம் என்ன என்பது தெரிந்து விட்டது. யாரோ திருடன்தான் தன்னுடைய எஜமானனை மிரட்டுகிறானே என்று பயந்தான். ஆனால் அதற்கு மாறாக தன் எஜமானனே இன்னொரு ஏழையை உள்ளே உட்கார்ந்து கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார். 'என்ன உலகமடா இது? பணத்தைச் சேகரிக்க இப்படியெல்லாம் கெட்ட வழிகளில் போகிறார்களே; லாலா ஜகத்ராம் சிங்கிற்கு என்ன குறை? இந்த மாதிரியெல்லாம் குறுக்கு வழியில், தீயதான செயலில் ஈடுபட்டு, பணம் சம்பாதிக்கிறாரே என்ற பயம் சிறிதாவது அந்த எஜமானனுக்கு இருந்ததா?'-இப்படியாக வெகு நேரம் எண்ணமிட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தான். அப்பொழுது ரம்சான் சிகரெட் ஊதிக் கொண்டே வந்தான். ரசிலாவைப் பார்த்ததும், "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்றான்.

"உலகத்தில் மாயா ஜாலங்கள் நடக்கின்றன!"

"அட, சரியாகப் புரிவது போல்தான் சொல்லேன்!"

ரசிலா தன் நண்பனை தூரத்தில் அழைத்துக் கொண்டு போய், யாராவது வருகிறார்களா என்று பார்த்து விட்டு, பிறகு, தான் மறைந்து நின்று கேட்ட உரையாடலைக் கூறினான்.

"இவ்வளவுதானா விஷயம்?"

"ஆமாம். நான்தான் ஒன்றையும் மறைக்காமல் உன்னிடம் கூறிவிட்டேனே!"

ரம்சான் தன் நண்பனை அருகில் அழைத்து, "நீ என் எஜமானனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

"உன் எஜமானனைப் பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால் மிகவும் கண்ணியமான ஆசாமி என்று நினைக்கிறேன்!"

"அவர் உன்னுடைய லாலா சாகேப்பின் குரு!" என்றான் ரம்சான்

"என்ன? நீ சும்மா பொய் சொல்கிறாயா?"

"நான் சொல்வது நிஜம் தான். இன்றைக்குக்கூட ஒரு வேட்டை வந்திருக்கு அவருக்கு! ஆயிரம் ரூபாய்க்கு குறைந்து வாங்க முடியாது என்று கூறிக் கொண்டேயிருக்கிறார்!" என்றான் ரம்சான்.

ரசிலா வாயடைத்துப் போனான்!

4

தான் இவ்வளவு நாட்கள் வரையில் நல்லவனாக, சூதுவாது தெரியாதவனாக வாழ்ந்ததை எண்ணிப் பார்த்தான் ரசிலா. எத்தனையோ முறை, செலவுக்காக தன் எஜமானர் பணம் கொடுத்தபோதெல்லாம் அதிலிருந்து காலணாகூட திருடியதில்லை. அப்படியே உண்மையான கணக்கை அவரிடம் ஒப்பித்துவிடுவான். நேற்றிரவின் நிகழ்ச்சியைக் கண்டு அவன் மனம் மாறிவிட்டது. 'இப்பொழுது நான் வாலிபனாக இருக்கிறேன். நன்றாக உழைத்து சம்பாதிக்கிறேன். சாப்பிடுகிறேன். நாளைக்கு நான் வயதாகி, கிழவனாக ஆகிவிட்டால் என்னை இந்த லாலா சாகேப் வேலைக்கு வைத்துக் கொள்வாரா? போடா கிழவனே — என்று தானே எட்டி உதைத்து அனுப்புவான். இத்தனை வருடங்களாக அவர் கொடுத்த பணத்தில் ஒவ்வொரு அணாவாவது திருடி வைத்திருந்தால் இன்று ஐம்பது அறுபது ரூபாய் சேர்ந்திருக்கும் என்ன கொடுமை! உலகம் இத்தனை கீழ்த்தரமான மக்களையா பெற்றிருக்கிறது? எல்லோருமே அப்படித்தான் என்றால் அப்பொழுது நாம் ஏன் தனித்து நிற்கவேண்டும்?'

"ரசிலா!" என்ற எஜமானனின் குரல் அவன் சிந்தனைக் கயிற்றை அறுத்தது.

"ரசிலா! இந்தா, ஐந்து ரூபாய்! பட்சணக் கடைக்குப் போய் ஐந்து ரூபாய்க்கும் பட்சணம் வாங்கி வா," என்றார் லாலா.

ரசிலாவுக்கு பணத்தைப் பதுக்க நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. நாலரைரூபாய்க்கு மட்டும் பட்சணம் வாங்கி, மீதி அரை ரூபாயை ரம்சானிடம் கொடுத்து, அவன் கடனை அடைத்து விட்டு வீட்டிற்கு வந்தான்.

பாபு ஜகத்ராம் சிங் பட்சணப் பொட்டலத்தை அவிழ்த்துப் பார்த்ததும் அவருக்கு சந்தேகமுண்டாயிற்று.

"இந்த பட்சணத்தை எவ்வளவு ரூபாய்க்கு வாங்கி வந்தாய்?" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் ரசிலாவின் முகம் மாறிவிட்டது. ஐயோ! முதல் குற்றமே வெட்டவெளிச்சமாகிவிட்டதா? இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "ஐந்து ரூபாய்க்கு சாகேப்" என்றான்.

இருந்தாலும் ஜகத்ராம் சிங்கிற்கு ரசிலாவின்மேல் நம்பிக்கை விழவில்லை. மேலும் ரசிலாவின் கை கால் பொய் சொன்னதால் நடுங்க ஆரம்பித்தது. ஜகத்ராம் அவனுடைய கண்களையே பார்த்தார். அக் கண்களால் பொய்யை மறைக்க முடியவில்லை. முன் பின் பொய் சொல்லியிருந்தால்தானே!

லாலா பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டே,

"நீ பொய் சொல்கிறாய்! இந்தப் பட்சணம் ஐந்து ரூபாய் பெறுமானதல்ல!" என்றார், ஆவேசம் கலந்த குரலில்.

அழுதால் ஒருவேளை பலன் கிடைக்குமென்று ரசிலா அழ ஆரம்பித்தான். விக்கி விக்கி அழுது கொண்டே, "நான் உண்மையைத்தான் சொல்கிறேன். நான் காலணாகூடத் திருடவில்லை. ஐந்து ரூபாய்க்கும்தான் பட்சணம் வாங்கி வந்தேன்!" என்றான்.

இதைக் கேட்டு மீண்டும் கோபங்கொண்ட லாலா ஜெகத்ராம்சிங் ரசிலாவின் முகத்தில் ஓங்கி அறைந்து, "எந்தக் கடையிலிருந்து வாங்கி வந்தாய்; சொல்?" என்றார்.

"பெரிய கடை வீதியிலிருக்கும் தில்லி பட்சணக் கடையிலிருந்து!" என்றான் ரசிலா.

"அப்படியானால் என்னுடன் அந்தக் கடைக்கு வா. உண்மை தெரிந்துவிடும்!" என்றார்.

இதைக் கேட்டு ரசிலா நடுங்கி விட்டான். ஏதோ ஒரு குற்றம் செய்யப்போய் இப்படி வகையாக மாட்டிக் கொண்டோமே என்று தத்தளித்தான். போகாமல் நின்றான்.

"ம்...ஏன் நிற்கிறாய்? வா...... வா..." என்றார் லாலா. பேசாமல் அவர் கூடவே போனான். இந்தக் குற்றத்திலிருந்து தப்ப, வேலையை விட்டே எங்கேனும் ஓடிவிடலாமா என்று பார்த்தான். அந்தப் பெரிய கடை வீதியில் பஸ்ஸும், லாரியும், மற்ற வாகனங்களும் குறுக்கே குறுக்கே ஓடிக் கொண்டிருந்தன! ரசிலா அதற்குள் நுழைந்து தப்பித்து ஓட முடியாமல் அவை போட்டன. எனவே வழியிலேயே நின்று விட்டான்.

"ஏன் நின்று விட்டாய்?" என்றார் லாலா.

"இல்லை எஜமான்; உண்மையைச் சொல்லி விடுகிறேன். நாலரை ரூபாய்க்குத்தான் பட்சணம் வாங்கினேன். என் கடனை அடைக்க எட்டணாவை எடுத்துக் கொண்டு அதை ரம்சானிடம் கொடுத்து விட்டேன்," என்றான் ரசிலா.

உண்மை கூறினால் விடுதலை கிடைக்கும்; அவர் தன்னை மன்னித்து விடுவார் என்று நினைத்தான். அதற்கு மாறாக ரசிலா போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

5

மறுநாள் அவ்வூர் மாஜிஸ்டிரேட்டின் முன் ரசிலாவின் வழக்கு வந்தது. அந்த மாஜிஸ்டிரேட்தான் இன்ஜினியர் வீட்டிற்குப் பக்கத்து பங்களாவில் வசிப்பவர்—ரம்சானின் முதலாளி.

ரசிலா தான் குற்றவாளிக் கூண்டில் ஏறியதும் உண்மையைக் கூறிவிட்டான். எதையும் மறைக்கவில்லை.

நீதிபதி நீதியைத்தான் விரும்புபவராக இருந்தார். அவர் மனதில் தயை என்பதே சிறிதும் கிடையாது. ரசிலாவை சும்மா விட்டு விட்டால் தன்னை ஊரார் ஏசிப் பேசுவார்களே! நீதிபதி ஆசனத்தில் உட்கார்ந்து அவனை சும்மா விட்டு விடலாமா? எனவே அவனுக்கு ஆறுமாதம் சிறைத் தண்டனை அளித்தார். சிறைத் தண்டனை அளித்துவிட்டு தன் கைக்குட்டையால் முகத்தைத் துடைப்பதைப் பார்த்தான் ரசிலா. முன்பொரு நாள் எந்தக் கைக்குட்டையில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் நோட்டுகள் வைத்து கட்டாக அவருக்கு லஞ்சம் அளிக்கப்பட்டதோ அதே கைக்குட்டையால்தான் அவர் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தார்!

[மூலம்: சுதர்சன்]

தமிழில்:
பி. ஆர். ராஜாராம்

★ கற்பனை உரையாடல் ★

[வான வெளியிலே உலாவிக் கொண்டிருக்கும் ருஷ்யாவின் 'ஸ்பூட்னிக்'கை, அமெரிக்காவின் செயற்கைச் சந்திரனை 'ஆல்பா' சந்திக்கிறது.]

ருஷ்ய ஸ்பூட்னிக்: வரவேண்டும்; வரவேண்டும்! பீப்...பீப் ...அமெரிக்கச் சிறுமியே! உன் வரவு நல்வரவாகுக!

அமெரிக்க ஆல்பா: (பியானோ ஒலியிலே பேசுகிறது) டிங்...டாங்...என்ன அக்கா நீ சௌகரியந்தானே? வானுலக வாழ்க்கை யெல்லாம் எபபடி இருக்கிறது? ஏதோ முன்னால் இங்கு வந்துவிட்டதால் என்னைப் பார்த்துச் "சிறுமி" என்று கூறி நையாண்டி செய்கிறீர்கள் போலும்! டிங் ...டாங்!...

ஸ்பூட்னிக்: சேச்சே! என்னடியாத்தா இது? விளையாட்டுக்காக ஏதோ பேசினால்......நீ வினையாக எடுத்துக் கொள்கிறாயே!...பீப்...பீப்!...

ஆல்பா: இல்லையம்மா! உனக்கு கொஞ்ச நாளாக சிறிது மண்டை கனத்து கர்வம் தலைக்கேறியிருக்கிறது! நீ அப்படித்தான் பேசுவாய்!... இருந்தாலும் நீ பேசுவதற்காக வெட்கப்பட்டுக் கொண்டு நான் கீழே விழுந்து விடுவேனென்று மட்டும் நீ நினைக்காதே!...

ஸ்பூட்னிக்: ஐயையோ! நீ தத்துப் பித்துன்னு அப்படியெல்லாம் செய்யாதே தங்கச்சி! நீ திரும்பி தவறிப் போய் கீழே விழுந்துவிட்டால்....ஐசனோவர், டல்லஸ் எல்லோரும் மூச்சை போட்டு கீழே விழுந்தாலும் விழுந்து விடுவார்கள்!.....இப்பொழுதுதான் தலை நிமிர்ந்த அமெரிக்க மக்கள்மீது சிறிதளவு கருணை காட்டியாவது இங்கே இன்னும் சிறிது நாள் தங்கி விட்டுப் போம்மா!...அது சரி ...உன் பெயரென்ன?......

ஆல்பா: என் செல்லப் பெயர் "ஆல்பா"!......

ஸ்பூட்னிக்: அட!......அமெரிக்காவின் ஆல்பாவென அழகான அடுக்கு மொழியிலே சொல்லேன்!...

ஆல்பா: போக்கா!...நீ பெரிய கிண்டல்காரி போலிருக்கே!... (ஆல்பாவின் முகம் நாணத்தால் சிவக்கிறது.)

ஸ்பூட்னிக்: அடேடே!......... அமெரிக்கப் பெண்ணான உனக்கு இவ்வளவு வெட்கம் கூடாதம்மா..... உன்னுடைய அடுத்த பெயர்...?

ஆல்பா: "வானவெளி ஆராய்ச்சியாளினி"...அல்லது "எக்ஸ்பிளோரர்"!...

ஸ்பூட்னிக்: அடேயப்பா! அவ்வளவு பெரிய பெயர் நமக்கு வேண்டாம்! ஆமா; "ஆல்பா" என்றால் என்ன அர்த்தமோ?

ஆல்பா: ஆல்பா என்பது ஒரு கிரேக்க எழுத்தம்மா!... "எக்ஸ் கதிர்கள்" என்று பெயரிட்டதுபோல், எனக்கு "ஆல்பா 1958" எனப் பெயர் வைத்துள்ளார்கள். அவ்வளவுதான்!

ஸ்பூட்னிக்: ஆமா!... என்னடியம்மா இப்படி ஒரேயடியா இளைத்துப் போயிட்டியே!... உங்க நாடுதான் பணக்கார நாடாச்சே! நல்லா சாப்பிட்டு உடம்பைச் சிறிது பருமனைக்கிக் கொள்ளக்கூடாது? அல்லது...... யார் மேலேயாவது காதல்...கீதல்...?.......அதெல்லாம் ஒன்றுமில்லையே?

ஆல்பா: ஏதேது உன் கிண்டல் ஓயாது போலிருக்கே!... நானும் முப்பது பவுண்ட் எடையுள்ளவள் என்பதை மறந்து விடாதே அக்கா! இளைத்துப் போன சிறுமி எனக் கூறி ஏளனம் செய்யாதே...ஆமாம்!...

ஸ்பூட்னிக்: அது போகட்டும்! முப்பது பவுண்ட் எடையுள்ள உன்னைத் தூக்குவதற்கா நாலு ராக்கெட்டுகள் வேண்டியிருந்தது? என்னுடைய எடை என்ன தெரியுமோ உனக்கு?...ஆயிரத்து நூற்றிப் பதினெட்டு பவுண்டு! இவ்வளவு எடையுள்ள என்னைத் தூக்க மூன்றே ராக்கெட்டுகள்தான் பயன்படுத்தப் பட்டன! அமெரிக்க ராக்கெட் ருஷ்ய ராக்கெட் எதிரில் நிற்க முடியுமா என்ன? என்ன இருந்தாலும் ருஷ்ய ராக்கெட்டின் சக்திதான் என்னே!

ஆல்பா: (கோபத்தால் கண்கள் சிவக்க) அம்மா! பெரிசா தற்பெருமையடித்துக் கொள்ள வேண்டாம்! உங்களுடைய மூன்று ராக்கெட்டுகளுக்கு நீங்கள் போட்ட தீனியும், எங்களுடைய நான்கு ராக்கெட்டுகளுக்கு நாங்கள் போட்ட தீனியும் சமம்தான்! ஒன்றுமே தெரியாத பட்டிக்காட்டுப் பெண்ணுகிட்டே பேசுவதுபோல் இந்த அறிவியல் மேதை அமெரிக்க ஆல்பாவிடம் அரசியல் "டுப்" விடாதேன்னு எச்சரிக்கிறேன்!......ருஷ்ய ஸ்பூட்னிக்கே! என்னுடைய மூர்த்தி சின்னதாக இருந்தாலும் கீர்த்தி பெரிதென்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்!

ஸ்பூட்னிக்: அட!...இந்தச் சிறுமிக்குத்தான் எவ்வளவு கோபம்?...

ஆல்பா: உனக்கு வயதாகி விட்டதக்கா!...ஆனால் நான்தான் உன்னைவிட அதிக நாள் இருப்பேனென்பதை மறந்து விடாதே!...நீ இன்னைக்கோ நாளைக்கோ...கீழே விழுந்து சாகப்போறே! நான் குறைந்தது இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்கு இந்த இடத்தைவிட்டு அசையமாட்டேனென்று கூறியிருக்கிறார்கள்! அதிக பட்சம் பத்து வருடகாலம் இங்கேயே இருந்தாலும் இருப்பேன்!......நீ என்னை அவமானப்படுத்தினாலும்...என் தாய் நாட்டை அவமானப்படுத்தி, அநாவசியமாக என்னோடு சண்டைக்கு வராதே! ஆமாம்... தாயைப் பழித்தவரை என் தாய் தடுத்தாலும் விடேன்!

ஸ்பூட்னிக்: அட! இன்னைக்கு வந்தவளுக்கிருக்கிற வாயைப் பாரு!...தலைகால் தெரியாமல் துள்ளிக் குதிக்கிறாளே!... ஆல்பா அம்மா!... ஏதாவது உடம்புக்கு...?

ஆல்பா: சும்மா மிரட்டாதே தாயே!...மூன்று மாதத்திற்கு முன்னால் வான வீதிக்கு வந்து விட்டதினால் வாயில் வந்தபடி எல்லாம் பேசலாமா?... தாய் நாட்டைப் பழித்தால் எந்தச் சிறுமிக்குத்தான் கோபம் வராது?...

ஸ்பூட்னிக்: உனக்கும் எனக்கும் எதற்கம்மா சண்டை? நல்ல காலமாக அந்தப் பாழும் பூலோகத்தை விட்டு இங்கு வந்து சேர்ந்தோமே! நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நயவஞ்சகர்கள், ஆதிக்க வெறியர்கள், பதவிப் பித்தர்கள், மக்களின் காலில் விழுந்து வாக்குச் சீட்டை வாங்கிப் பதவிக்கு வந்த பிறகு, மக்களின் இரத்தத்தையே உறிஞ்சி வாழும் மகா புண்ணியவான்கள் — இவர்கள் நிறைந்த அந்த பூலோகத்தை நினைத்தாலே நெஞ்சு பதறுகிறது!...

ஆல்பா: இந்த சேதி உனக்குத் தெரியுமா?...அல்ஜீரியா ஒரே சுடுகாடாகக் காட்சியளிக்கிறது. ஐயோ! அல்ஜீரிய நாட்டினர் சாகத்தான் பிறந்தவர்களோ? காட்டிலே மிருகங்களை வேட்டையாடுவது போல, அல்ஜீரியா நாட்டிலே மனிதர்களை வேட்டையாடுகின்றனர்! பிரெஞ்சு ஏகாதிபத்திய வெறியர்களின் பேயாட்டம் ஓயவில்லை! அன்மையில்கூட அல்ஜீரியா எல்லையிலுள்ள கிராமத்தில் குண்டு போட்டு நாசமாக்கியிருக்கிறார்கள்! இதில் 72—பேர் இறந்திருக்கின்றனர்; 80 பேர் படுகாய மடைந்தனராம்!...

ஸ்பூட்னிக்: அல்ஜீரியாவில் நடக்கும் அக்ரமங்களையும் அங்கு இறந்து கிடப்பவர்களின் பிணக் குவியலையும் காணும்போது அமைதியான இந்த வானவீதி எவ்வளவோ தேவலாம் என்றுதான் படுகிறது! நாம் இப்பொழுது உலாவிக் கொண்டிருக்கும் இந்த உல்லாச வானவீதியிலே...எது நேரினும் இடர்ப்படமாட்டோம்! அண்டம் சிதறினால் அஞ்சமாட்டோம்! கடல் பொங்கி எழுந்தால் கலங்க மாட்டோம்! யார்க்கும் அஞ்சோம்—எதற்கும் அஞ்சோம்!...

ஆல்பா: அப்படியா?...

ஸ்பூட்னிக்: நமக்கு இங்கே என்ன குறைவு?...அது சரி; இன்னும் பூலோகத்திலே ஏதாவது சிறப்பான செய்திகள் உண்டா?...

ஆல்பா: ஏராளமாக உண்டு! ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் அடுத்த படியாக முதல்தரமான செய்தியளிக்கும் இந்தியாவை மறந்து விட்டாயே!...

ஸ்பூட்னிக்: என்ன? இந்தியாவிலே ஏதாவது செயற்கைச் சூரியனை உண்டாக்கி விட்டார்களா என்ன?

ஆல்பா: அதைவிட அற்புத ஆராய்ச்சிகள்! விநோதமான செய்திகள்! கடலைப் பிண்ணாக்கைச் சாப்பிட்டு உயிர் வாழலாமா; உண்மை பக்தியின் இலட்சணம் என்ன— இக் கேள்விகளுக்கெல்லாம் விடை கண்டு பிடித்திருக்கிறார்கள்!

"கடல் கடந்து செல்லக் கூடாது!" என்ற கொள்கையை உபதேசிக்க பூரி சங்கராச்சாரியார், கடல் கடந்து, தன் சிஷ்ய கோடி

[தொடர்ச்சி பக்கம்—10]

தமிழர்-அன்றும் இன்றும்

விலை ரூ. 0—4—0 (25 பைசா)

ஆசிரியர்: **புலிக்கொடியான்**
(சிங்கப்பூர்)

தமிழரின் முன்னாட் பெருமையையும் இந்நாளில் உள்ள நிலைமையையும் ஆசிரியர் தெளிவாக விளக்கியுள்ளார். பல புள்ளி விபரங்களுடன் கூடிய சிறு நூல். தனிப் பிரதி வேண்டுவோர் 31 பைசாவுக்கு தபால் தலை அனுப்ப வேண்டுகிறோம். வியாபாரிகளுக்கு 25 சதவிகிதம் கழிவு உண்டு.

மற்ற தமிழ் நூல்கள் அனைத்தும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும். விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

ராஜேஸ்வரி புத்தக நிலையம்,
மைலாப்பூர், சென்னை-4.

சிங்கப்பூரில் கிடைக்குமிடம்:
எம். என். இருளப்பன், ராயல் தியேட்டர் புக் ஸ்டால்,
635-எ, நார்த் பிரிட்ஜ் ரோடு, சிங்கப்பூர்-7.

கற்பனை உரையாடல்...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

களுடன் நியூயார்க் மாநகரை அடைந்துள்ளார்!

அமெரிக்க ஆல்பா விண்ணிலே பறந்தது!

இந்திய ஆல்பா நியூயார்க்குக்குப் பறந்திருக்கிறது!

இந்தச் செய்திபெல்லாம் உப்புச் சப்பு இல்லாதவை! மிக மிக விசித்திரமான செய்தியைக் கேள்! "காங்கிரஸ் கணம் காமராஜரின் காரசாரமான பேச்சு! தலை போனாலும் சரி; உயிர் போனாலும் சரி...ராஜாஜியும் அண்ணாத்துரையும் என் மந்திரி சபையை அசைக்க முடியாது! ராமன் சுக்ரீவனைப் போல இருவரும் சுயகோத்திக்குடன் உதவி தேடுகிறார்கள்! சுதந்திரப் போராட்டத்தில் நாங்கள் வேண்டிய மட்டும் அடி உதைபட்டிருக்கிறோம்... இது எங்களுக்குப் பழக்கமானதுதான்!......" —பார்த்தாயா ஸ்பூட்னிக்! ஊமையாக இருந்த காமராஜ் உயிரைக் கொடுத்து உணர்ச்சியோடு பேசியிருக்கிறார்! தம்மை 'ராமாகன்,' தன் இராஜ்யத்தை 'ராமராஜ்யம்' எனப் பெருமையோடு கூறிக்கொண்ட அவர்கள் இன்று தி. மு. க.வை யெல்லாம் ராம, சுக்ரீவர்கள் போலாக்கி, இடையரன விபீஷனராகிறாரே! அடி உதையெல்லாம் அவர்களுக்கு மிகவும் பழக்கப்பட்டதுதானாம்! அதனால்தான் அவர்கள் வெள்ளைக்காரர்களிடம் வாங்கிவந்த அடி உதைகளை தமிழர்களுக்குத் திருப்பித் தருகிறார்களாம்!

ஸ்பூட்னிக்: அது சரி ஆல்பா!... பாக்கிக் கதைகளை பின்னால் பேசிக் கொள்ளலாம்!......... எனக்கு ஒரு துணைகூட இல்லையே என ஏங்கிக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீ வந்து சேர்ந்தாய்! அமெரிக்காவும் ரஷ்யாவும் சிநேகித நாடுகளாவதற்கு முன்னால் நாம் சிநேகிதிகளாகி உலகத்தைச் சுற்றி உல்லாச பவனி வருவோம்! நம்முடைய நாட்டைப் பார்த்தாவது உலகம் அமைதி அடையட்டும்! சண்டைகள் நீங்கி சமாதானம் நிலவட்டும்! அல்லல்கள் நீங்கி ஆனந்தம் பொங்கட்டும்!...எங்கே, ஆல்பா தங்கச்சி; உன் நட்புக் கரங்களை நீட்டு...!

ஆல்பா: ஐயோ! உன்னோடு நட்பாக இருந்தால் அமெரிக்கர்கள் என் மீது அணுகுண்டைப் போட்டு விடுவார்களே!......மேலும் உன்னை நெருங்கி வந்தாலே கம்யூனிஸ்ட் "உல்கா" நாயினுடைய பிண நாற்றம் மூக்கைத் துளைக்கிறது! உன்னுடைய நட்பும் வேண்டாம்; ஒரு எழவும் வேண்டாம்! நீ இடப் பக்கமாகவும் போக வேண்டாம்; வலப் பக்கமாகவும் போக வேண்டாம்! மேலே விழுந்து கடிக்காமல் போனாலே போதும்!

[இதைக் கேட்ட ஸ்பூட்னிக்குக்கு மிகுந்த கோபம் உண்டாகிறது! ஆத்திரத்தால் அதன் கண்கள் சிவக்கின்றன.]

ஸ்பூட்னிக்: என்ன சொன்னாய்? அற்பச் சிறுமியே! போனால் போகிறதே என்று நேசக்கரத்தை நீட்டினால் நீ கம்யூனிசத்தையா பழித்தாய்?.........கம்யூனிசத்தை 'உல்கா நாயின் பிண நாற்றம்' எனக் கூற உனக்கு எவ்வளவு நெஞ்சுத் துணிவு? அற்பச் சிறுமிக்கு இவ்வளவு அகங்காரமா? ....இதோ உன்னை என்ன செய்கிறேன் பார்! பீப்...பீப்!...

[மிகுந்த கோபத்துடன் ஆல்பாவை ஸ்பூட்னிக் துரத்துகிறது...]

ஆல்பா: ஐயோ! ஸ்பூட்னிக் அக்கா!...என்னை மன்னித்துவிடு! உண்மையிலேயே நான் கம்யூனிசத்தைப் பழிக்கவில்லை! செத்துப் போன உல்காவின் நாற்றத்தைப் பற்றியே குறிப்பிட்டேன்! ஐயோ!......நீ என்மீது மோதினால்...நான் தூள் தூளாகிவிடுவேன்! ஸ்பூட்னிக் தாயே! இனி நான் உனக்கு அடிமை! எனக்கும் அரசியலுக்கும் வெகுதூரம்!...தயவு செய்து கருணை காட்டு தாயே! என்னை மட்டும் காப்பாற்று! டிங்!...டாங்!...டிங்...டாங்!...

[இங்ஙனம் கதறிக்கொண்டும், 'டிங் டிங்!' எனப் பியானோ ஒலித்துக் கொண்டும் ஆல்பா முன்னே ஓட, அதை ஸ்பூட்னிக் "பீப்... பீப..." என மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கத் துரத்திக் கொண்டிருக்கிறது. எடையிலும் கனடரிமானத்திலும் பெரிதான ஸ்பூட்னிக்கால் வானவீதியிலே அதிக நாட்கள் இருக்க முடியாதென்பது உறுதி!]

—"இன்பபுரியான்"

பிறைவானம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

போய்விட்ட என் கண்கள் மீண்டும் திறந்தபோது 'சின்ன ஐயா! சின்ன ஐயா!' என்று அலறிக் கொண்டிருந்தாய். உன் உடலிலே ஆங்காங்கே தெரிந்த சிறு சிராய்ப்பு கீறும் தப்பவில்லை என்று எனக்கு எடுத்துக் காட்டிற்று. நான் உடலை அசைத்தேன். வலி தாங்க முடியவில்லை. 'கருப்பா!...' என்று அலறினேன். 'கடையாணியை எவனோ கழட்டி விட்டிருக்கான் சின்னையா! நான் என்ன செய்வேன்?' என்று தடுமாறினாய், நீ! 'ஏன் கருப்பா, பயப்படுகிறாய்? இன்னும் கொஞ்ச தூரம்தானே; நடந்தே சென்று விடலாம்!' என்று நான் சொன்னேன். எழுந்தேன். நிற்கவும் முடியவில்லை. தள்ளாடினேன். தாங்கிக் கொண்டாய் நீ. நாம் இருவரும் 'ஒன்றாக' நடந்தோம்...ஆமாம் கருப்பா; ஒன்றாகத்தான் நடந்தோம்...! இணைந்து நடந்தோம்!...அந்த இணைப்புக்குத்தான் எத்தனை எதிர்ப்புகள்! நாம் ஒட்டி நடந்தோமே; என்ன கெட்டு விட்டது! பழைய காலத்துப் புராண பேராபத்து போல அண்டம் இடிந்து விட்டதா? ஆழ்கடல் கொந்தளித்து விட்டதா? அல்லது தலைதான் ஆயிரம் சுக்கல்களாக வெடித்து விட்டதா? இல்லையே!

"நான் விபத்தை மறந்தேன். நாம் இருவரும் நல்லவர்கள் நெஞ்சங்கள் விரும்புவதுபோல் ஒன்றாகி விட்டோமல்லவா? என் விழிகள் நீரைக் கொட்டின. ஆனால் அது வேதனையால் மட்டுமல்ல; மகிழ்ச்சியாலும்கூட!

"ஆனால், அந்த மகிழ்ச்சி...... நீடிக்காத வானவில்லாக மாறி மறைந்து விட்டதே! வானவில் மறைந்தது; மேகம் திரண்டது; வானம் இருண்டது! மழை!... ஒரே மழை.........! பிறகு... பெருங் காற்று!...புயல்!...பிரளயம்!...ஆமாம்; கருப்பா! இதோ, காலியாகக் கிடக்கும் உன் ஓட்டைக் குடிசையின் முன் நின்று கொண்டு நினைத்துப் பார்க்கிறேன். நம்மிடையே புகுந்த பிரளயத்தை; அது உண்டாக்கி விட்ட சீரழிவை— என் நெஞ்சு நடு நடுங்குகிறது! இயற்கை உண்டாக்க வல்லையே அந்த சோகத்தை! இரும்பு நெஞ்சு படைத்த என் அப்பா தான் அதன் காரண கர்த்தாவாகி விட்டார்! ஐயையோ... எப்படித்தான் மீண்டும் நினைக்கிறேனோ தெரியவில்லையே!...

"கருப்பா! நடக்க முடியாத என்னைத் தாங்கிக்கொண்டு வந்தாய் நீ! ஆபத்தில் உதவிய உன் அருமந்த பண்பைக்கூட அபாயத்தின் வித்து என்று எண்ணிவிட்டாரோ என்னவோ என் அப்பா! 'ஐயோ! மகாபாவி! தொட்டுட்டியாடா துரோகி? நீ உருப்படுவியா? ஐயையோ! என் குடி முழுகிப் போச்சே!......குடி முழுகிப் போச்சே!' என்று அலற அடித்துக் கொண்டு திண்ணையிலிருந்து பாய்ந்தார். நீ பதறிப் போய் என்னை அப்படியே விட்டு விட்டு விலகி ஓடினாய்! ஆனால் அப்பாவின் கண்ணெதிரே கிடந்த கம்புதானா தென்பட வேண்டும்? பாய்ந்து எடுத்தார். பசித்த புலிபோல தாவினார். அதற்குப் பிறகு...

"கருப்பா!......அந்த கோரக் காட்சியை மீண்டும் நினைத்துப் பார்க்கும் அளவுக்கு என் இருதயம் இரும்பாகிவிட்டதோ என எண்ணி விடாதே, நண்பனே! உன் மண்டை பிளந்து—இரத்தம் பீறிட்டு— "எசமான், எசமான்!" என்று அலறிச் சாயும் அளவுக்கு அந்த வேங்கை உன்னைப் பழி தீர்த்துக்கொண்டது! நீ சுருண்டு விழுந்தாய்! நானும் மயக்கமுற்று விழுந்துவிட்டேன்!

"கண் விழித்த போதுதான் நண்பா, நீ இல்லாததைக் கண்டு திடுக்கிட்டேன். ஆனால் நீ விழுந்த இடத்தில் சிந்திக் கிடந்த இரத்தத் துளிகள் மட்டும் கருப்பன் காட்டுமிராண்டியிடம் சிக்கிய கதையை எனக்குச் சொல்லியது! நான் நடந்தேன். இரத்தத் துளிகள் காட்டிய வழியில் நடந்தேன். உன் உடலில் இருந்த இரத்தமனைத்தும் தீர்ந்து விட்டதோ என்னவோ — எனக்குப் பாதை காட்டி வந்த அதுவும் மறைந்து விட்டது! நீ எங்கே போய்விட்டாய், கருப்பா?

"தேடுகிறேன்; தேடுகிறேன்! கருப்பா! என் கண்ணான நண்பனே!... நீ எங்கே சென்றாய்?

"ஏ, ஓட்டைக் குடிசையே! உன்னுள்ளே ஒண்டிக் கிடப்பானே; அந்த அன்பு நெஞ்சு கொண்ட சிறுவன் எங்கே?...

"ஏ, ஓங்கி வளர்ந்த தென்னையே! சமூகத்தின் அதள பாதாளத்தில் கிடந்து உழன்ற என் நண்பன் உனது கூரிய கண்களுக்கு எங்கேயாவது தட்டுப்படுகிறானா?......

"கருப்பா! கருணை நெஞ்சு கொண்ட தோழனே! நீ எங்கே போய்விட்டாய்? சொல்...... சொல்...!

"தோழனே! நீ எங்கே?...... எங்கே?...எங்கே?..."

—சொர்ணம்

இந்தியும் — சிங்களமும்!

அன்புள்ள ஐயா,

பழம் பெருமையும், பாருக்கெல்லாம் நாகரீகம் கற்றுத் தந்த உயர் பண்பாடும் கொண்ட தமிழகத்தில் இன்றைய தினம் இந்தி எனும் மந்தி அலங்காரி அடியெடுத்து வைப்போமா; அழித்து விடுவோமா அகிலத்து மென்மொழியை—என்று துணிந்து விட்டிருக்கிறாள். நாள்தோறும் அது குறித்து கடல் கடந்து வரும் செய்திகளைக் கேட்டு குமுறுகிறது எங்கள் நெஞ்சம்!

ஆதிபத்திய நோக்கு கொண்ட அந்த மொழி வெறி 'இந்தி கற்காவிடில் வேலை இல்லை' என்கிற பாணம் ஒன்றையும் வீசியிருப்பதையும் கண்டோம்!

அங்கே அப்படி!..........இங்கேயோ?......

பிறந்த பூமியிலே இந்தி கற்காவிடில் சர்க்கார் வேலையில்லை!......

பிழைப்புக்கென்று அண்டிவிட்ட இலங்கையோ......சிங்களம் கற்காவிடில் அரசாங்க வேலை இல்லை—என்கிறது!

17—1—58—ல் வெளி வந்த இலங்கை அரசாங்க 'கெஜட்'டில் இந்தப் பேராபத்தின் முதல் சின்னம் காணப்படுகிறது.

'சிங்களம் தெரிகிறவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவேண்டும்' என்ற 'அழுத்தமான' விதியோடு சர்க்கார இலாக்கா ஒன்று வேலைக்கு நபர்கள் கேட்டிருக்கிறது!

இது கண்டு உளம் கொதித்து நிற்கின்றனர் தமிழ் மக்கள்!

இந்த நிலை நீடித்தால்......?

தமிழினத்தின் குரல் வளையில் கைவைத்துவிட்ட சிங்கள மொழி வெறியின் பிடிப்பு இறுகும்!......

அதற்கும் பிறகு......?

பிறந்த நாட்டிலோ புகலிடமின்றி—புகுந்த நாட்டிலும் பிழைப்புக்கு வழியின்றி—கடல் கடந்த தமிழினம் என்ன நிலைக்கு ஆளாகும்?

விடை காணமுடியாத கேள்விக் குறி எங்கள் விழிகளுக்கு முன்னே பயங்கரமாகத் தோன்றிக்கொண்டிருக்கிறது!

—சுப. சுப்புரத்தினம்,
—மரகதம்,
திரிகோணமலை (இலங்கை)

★ பிறைவானம் ★

"எங்கே தேடுவேன்?"

"கருப்பா...! கருப்பா!!...

'நீ எங்கே இருக்கிருய் கருப்பா?...நீ இனிமேல் வரவே மாட்டாயா, கருப்பா?...

"உன்னை எங்கே சென்று தேடுவேன்?...நீ எங்கே போய் விட்டாய்? சொல்......சொல்...... எங்கிருந்தாவது கத்து!...உன்னுடைய குரல் எந்தத் திசையிலிருந்து எழுந்தாலும், நான் ஓடோடி வந்து விடுகிறேன்...

"தெரியவில்லையா உனக்கு; நான்தான் தியாகு கத்துகிறேன்! 'சின்ன ஐயா, சின்ன ஐயா' என்று குழையக் குழையக் கூப்பிடுவாயே; அந்தத் தியாகராஜன்தான் கதறுகிறேன், கருப்பா! விழவில்லையா, உன் காதுகளில்? இரங்கவில்லையா, உன் மனம்? எப்போது கருப்பா கல்லானது உன் இதயம்?...

"ஏன்? நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்.........அதைத்தான் சொல்லேன்!...நினைத்துப் பார் கருப்பா! உனக்காக நான் என் அப்பாவிடம் எவ்வளவு வாதாடியிருக்கிறேன்; வழக்காடியிருக்கிறேன்..........ஆனால் உனக்கு அவை எல்லாம் தெரியாதுதான்! அதற்காகத்தான் என்னைத் தவிக்க விட்டுப் போய்விட்டாயா?...

"கருப்பா!......உன்னை அப்பா 'பறையன்' என்று சொல்லும் போதெல்லாம் நான் சும்மா இருந்ததில்லை என்பது உனக்குத் தெரியுமா? 'பறையன் என்றால் என்ன அப்பா?'— என்று நான் கேட்டிருக்கிறேன். 'நோக்குத் தெரியாதாடா கண்ணு; அப்படின்னா தாழ்ந்த ஜாதின்னு அர்த்தம்' என்பார் அப்பா. 'அப்படின்னா......?' என்று மறுபடியும் கேட்பேன் நான். 'அப்படின்னா...அவனை நாமபத் தொடப்படாது! தொட்டா தீட்டு ஒட்டிண்டுடும்! ஆண்டவன் நம்மைக் கோவிச்சுண்டுடுவார்!' என்று அவர் விளக்கம் தருவார். அந்த விளக்கம் விஷம் கலந்தது என்று எனக்கு நன்றாகத் தெரியுமே; அதனால்தானே நான் உன்னிடம் நெருங்கி நெருங்கி வருவேன்! ஆனால் நீயோ விலகி விலகிப் போவாய்! நான் ஆசையுடன் தருகின்ற பட்சணங்களை நீ வாங்கிக் கொள்ள மாட்டாய். பயந்து பயந்து ஓடுவாய்! வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன் கருப்பா; அவைகளை எல்லாம் நான் எனக்கென்று கெஞ்சி வாங்கிவருவேன்! ஆனால் உனக்காக...எல்லாம் உனக்காக!

"ஜல், ஜல் என்று ஜலங்கை சபதம் ஒலிக்க மாட்டு வண்டியிலேறி பக்கத்து நகர் பள்ளிக்குச் செல்கின்ற போது, உன்னையும் உடன் அழைத்துச் செல்லலாம் என்று நான் எத்தனை முறை நினைத்திருக்கிறேன், தெரியுமா? ஆனால் நீயோ...என்ன கொடுமை! கொளுத்தும் வெயிலென்றாலும், கொட்டும் மழை என்றாலும் வயல் வெளியிலே நின்று கொண்டிருப்பாய்! மாடுகளை மேய்த்துக் கொண்டிருப்பாய்! அல்லது அப்பாவின் ஆவேசக் கூச்சலுக்கிடையே சிக்கி, தலை குனிந்துசிலையாய் நின்றுகொண்டிருப்பாய்! நான் வண்டியில் போகும்போது பார்ப்பேன்— ஆடுமாடுகள் விருப்பம்போல் சுற்றும்; பறவைகள் இச்சைபோல் பறக்கும்; ஆனால் பரிதாபத்திற்குரியவனே, நீ மட்டும் சிறைக் கைதிபோல்—சிரிக்கத் தெரியா ஊமைபோல்—அடைபட்டு—அல்லல்பட்டு ஏன் கிடக்க வேண்டும்? நானே கேள்வி எழுப்பிக் கொள்வேன்; பதிலைத் தேடுவேன்; சுலபத்தில் கிடைக்குமா? பறையன்...நீ பறையனல்லவா...ஜாதியிலே தாழ்ந்தவனல்லவா ... உன்னைத் தொட்டுவிட்டால் ஆண்டவன் கோபித்துக் கொண்டு விடுவார் அல்லவா...அதனால்தான் இந்த அவலப் பிழைப்பா? ஆகவேதான் நீ இப்படிக் கண்ணிருந்தும் கல்வி அறிவு பெரு குருடனாக — அடிமையாக— உழன்று கொண்டு கிடக்கிருயோ—என்று நான் எத்தனை முறை என்னையே கேட்டுக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?

"என் கண்கள் புத்தகத்திலுள்ள எழுத்துக்களில்தான் பதிந்திருக்கும். ஆனால் எண்ணமெல்லாமோ உன்னைத் தேடி ஓடும். கண்களை வீட்டுக் கூரையில் நிலைகுத்தி, பித்து பிடித்தவனைப்போல் உட்கார்ந்திருப்பேன். 'ஏற்றத் தாழ்வற்ற சமூக அமைப்பை உருவாக்கி விட்டது ஒன்றே பாரத சர்க்காரின் பெரும் சாதனை அல்லவா?' என்று எங்கேயோ ஒரு மந்திரியார் எதிர்க் கட்சிகளுக்கு சவால் விட்டுப் பேசியதை நான் படித்திருந்தேன்—அதன் விளைவுதான் என் நீண்ட மௌனம்; மீளாத சோகம்!

"அன்றொரு நாள்......உன்னையும் என்னையும் பிரித்து விட்ட அந்த நிகழ்ச்சி...அதை நினைத்துப் பார்க்க முடியவில்லையே கருப்பா!

"பள்ளிக்கு நேரமாகி விட்டது. வீட்டு வண்டிக்காரனையோ காணேம். அப்பா துடித்துக் கொண்டு நின்றார். 'என் மகன் ஒரு வருங்கால வக்கீல்; லட்சம் லட்சமாகக் குவிக்கப் போகிறான் செல்வம்' என்று மனக் கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறாரே அவர்—அப்படிப்பட்டவர் அரை நிமிடம்கூட நான் பள்ளிக்குத் தாமதமாகச் செல்வதை விரும்பாததில் வியப்பென்ன இருக்க முடியும்? அப்பா வண்டிக்காரனை சபித்துக் கொண்டு நின்றார். ஆனால் யார் விட்ட 'சாப'மோ—அந்த வண்டிக்காரன் தன் அருமந்த குழந்தையைச் சாவுக்குப் பலி கொடுத்துவிட்டு குனிந்த தலையோடு—கொந்தளிக்கும் நெஞ்சத்தோடு வந்து நின்றான். அவனால் வண்டி ஓட்ட முடியாதுதான்! அப்பாவின் உள்ளத்தில் எங்கேயோ ஒரு மூலையில் அதுவரையில் சாகாமல் ஒட்டிக் கொண்டிருந்த மனிதத் தன்மை அந்த உண்மையை 'போனால் போகிறது' என்று ஒப்புக் கொண்டது. அதற்காக என் ஒருநாள் படிப்பைத் தியாகம் செய்துவிட முடியுமா? அப்பா யோசித்தார். 'ஏய், கருப்பா! நோக்குதான் வண்டி ஓட்டத் தெரியுமோல்லியோ; போயிட்டு வந்துடு!' என்றார். நீ சிரித்துக் கொண்டு வரவேற்றாய்; நான் குதித்துக் கொண்டு புறப்பட்டேன். 'டேய்! பத்திரம்டா...... மாட்டைத் தட்டி ஓட்டாதே! ரோடு மகா மோசமாயிடுத்து!' என்று உனக்கு எச்சரிக்கையும், 'கண்ணு! அந்தச் சனியனைத் தொட்டுக்கிட்டுப் பிடாதே!' என்று எனக்கு அபாய அறிவிப்பும் கொடுத்து அனுப்பி விட்டார் அப்பா.

"கருப்பா...அன்றைய தினம் வண்டியோட்டிக் கொண்டு சென்ற நீ ஏனடா பின் விளைவை அறியாமல் போய் விட்டாய்?

"வண்டியிலிருந்து 'கட கட' என்ற சப்தம்தான் எழும்பிக் கொண்டிருந்ததே தவிர, நீ பேசவே இல்லை. 'ஹை...ஹை...' என்று அப்போதைக்கப்போது மாடுகளை விரட்டும்போது, அப்படியே என் அப்பாவிடம் இருக்கின்ற ஜாதித் திமிரையும் விரட்டிவிட முடியாதா என்று நான் நினைப்பேன். கருப்பா... அன்று நான் உன்னை ஒன்று கேட்டேனே நினைவிருக்கிறதா, "சாதி இரண்டொழிய வேறில்லை — சாற்றுங்கால்......' என்ற நாலடியார் பாட்டு உனக்குத் தெரியுமா' — என்று. ஆனால் நீயோ......... 'என்ன சின்ன ஐயா அது...பாட்டா? எனக்குத் தெரியாது. ஆனால் இன்னொன்னு தெரியுமே!' என்று கண நேரம் பேசுவதை நிறுத்தினாய். நான் உன்னையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன், என்ன பாடப் போகிறாய் என்று!

"சாதிகள் இல்லையடி பாப்பா
—குல
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல்
பாபம்!'

என்று உரத்தக் குரலெடுத்து நீ பாடினாய். 'பாரதியார் பாட்டல்லவா இது?' என்று கேட்டேன் நான். 'இல்லியே...இது ரேடியோ பாட்டு ஐயா...நான் ரெண்டு தரம் கேட்டேனே!...' என்றாய். கபடமற்றவன் நீ; உலகம் தெரியாதவன் நீ! என்ன செய்வது? பிறகு நான் மறுபடியும் பாடச் சொன்னேன் உன்னை. பாடினாய்; ஆனால் அதற்குள்ளே புதைந்து கிடந்த பேருண்மையை—பாப்பாவுக்கு பாரதியார் சொல்லிய அறிவுரையை—பைத்தியக்காரனே, நீ மட்டும் புரிந்து கொள்ளவே இல்லை! நான் உன்னை நெருங்கினேன்! 'ஐயோ சாமி! என்னைத் தொட்டுடாதீங்க! ஏரிக்கரை முனியன் என்னைப் பொசுக்கிடுவான்!' என்று அலறினாய்! நான் உனக்கு என்னென்னவோ சொன்னேன்; ஆலயப் பிரவேசம் பற்றிச் சொன்னேன்; தீண்டாமையின் கொடுமை பற்றிச் சொன்னேன். ஆனால், என்ன பலன்? நீ விலகித்தான் போனாய்! உன் கண்ணெதிரே கோவைப் பழக் கண்களை உருட்டிக் கொண்டு, 'கொன்று வடுவேன், தொடாதே அவனை' என்று எச்சரிக்கும் என் அப்பாவின் அகோர சொரூபம்தான் தெரிந்து கொண்டிருந்ததா?

"மாலையில் பள்ளி முடிந்தது. திரும்பிக் கொண்டிருந்தோம். வண்டி மெதுவாகத்தான் வந்து கொண்டிருந்தது. அதுவும் தெருவின் மேல் அல்ல; ஆபத்தின்மேல்! ஆமாம்; கருப்பா! அந்த கொடுமையை என்னவென்று சொல்லுவேன்! நீ அறியாமல்—நான் அறியாமல் வந்து குதித்த அந்தப் பேராபத்துக்கு யார் காரணம் என்று இன்றுவரை எனக்குப் புலப்படவில்லை. பண்ணையார் மகனல்லவா, பள்ளிக்கூடத்தில் என்னைப் பிடிக்காத பையன்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்களே! அவர்களில் எவன் செய்தானோ அந்தக் கொடுமையை—எவன் பிடுங்கி விட்டானோ வண்டிச் சக்கரத்தின் கடையாணியை!

"வண்டி கிராமத்தை நெருங்கிவிட்ட நேரம்—தனது ஒருநாள் வண்டியோட்டும வாழ்க்கையை வெற்றிகரமாக முடித்து விட்ட காரணத்தாலோ என்னவோ நீ நின்று கொண்டு வண்டி ஓட்டினாய்.

"ஆனால் கருப்பா!... பள்ளிச் சிறுவன் யாரோ செய்துவிட்ட கொடுமை அப்போதுதான் நம்மைப் பாதித்து விட்டது! 'கட கட'வென்று ஓடிக் கொண்டிருந்த வண்டி திடீரென்று ஒரு பேராபத்துக்கு...என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லையே! கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில் எத்தனை கோரம்!...கடையாணி கழற்றப்பட்டிருந்த ஒரு வண்டிச் சக்கரம் பாதையோரம் தனியே உருண்டோட —மறுகணம் அறுத்துக் கொண்ட மாடுகள் வெறிபிடித்து ஓட — வண்டி 'தடால்'என்று கீழே சாய்ந்தது! நான் 'ஐயோ' என்று அலறிக் கொண்டு தூக்கி எறியப்பட்டேன், எங்கேயோ! இருண்டு

[தொடர்ச்சி பக்கம்—10]

சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள்:

[சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு பிப்ரவரி 15, 16 தேதிகளில் வேலூர் (சேலம்) நகரில் சிறப்புற நடைபெற்றபோது, நாட்டு மக்களின் உள்ளத்தின் பிரதிபலிப்பாக தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கிறது.]

அனுதாபம்

ஜனவரி 6-ம்நாளன்று சென்னை நகரில் நேருவுக்குக் காட்டப்பட்ட கறுப்புக்கொடி கண்டனத்தின்போது, ஆட்சியாளரின் அடக்கு முறைக்கு ஆளாகி தோழர்கள் மொய்தீன் பிச்சை, கோவிந்தராவ் உயிர் நீத்தமைக்கு இம்மாநாடு தனதுவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

விசாரணை தேவை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேச்சுரிமையை அடக்கும் விதத்தில் பொதுக் கூட்டங்களுக்குத் தடை விதித்து, ஐயாயிரம் பேர்களைச் சிறையில் தள்ளி, இரண்டு தோழர்களை மாளச் செய்து, கூடியிருந்த மக்கள் மீது வரை முறையின்றி தடியடிப்பிரயோகங்களைச்செய்து ஜனநாயக முறையில் அனுமதிக்கப்பட்டுள்ள கறுப்புக் கொடி கண்டனத்தை அடக்குவதற்காகக் கடுமையான அடக்குமுறை வெறியாட்டத்தை கட்டவிழ்த்துவிட்ட சென்னை அரசினரின் எதேச்சாதிகாரப் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(அ) போலீசாரின் அத்துமீறிய நடவடிக்கைகள் குறித்து நீதி விசாரணை ஒன்றை நடத்துமாறு சென்னை சட்டசபையில் எழுப்பப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாதது கண்டு இம்மாநாடு வருந்துவதுடன், ஜனநாயகப் பண்பாட்டின்படி, உடன் நீதிவிசாரணையை நடத்துமாறு இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: சிவப்பிரகாசம், பி. ஏ., பி. எல்.

வழி: ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

இந்தியை எதிர்ப்போம்

இந்தியாவில் ஒரு பகுதியாக அடக்கி வைக்கப்பட்டுள்ள திராவிடம் விடுதலைபெற்று திராவிடக்கூட்டாட்சி எனும் தனியரசாக மலரவேண்டும் எனப் பணியாற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியா முழுமைக்கும் ஒரு பொது மொழி தேவை என்ற தத்துவத்தின் அடிப்படையை மறுப்பதுடன், அந்தப் போலித்தனத்தைக் காரணமாகக் காட்டி இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் இந்திமொழி ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர டெல்லி ஆதிக்கத்தினர் செய்யும் முயற்சிகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. அரசாங்க நிர்வாகத்திற்குட்பட்ட பல்வேறு துறைகளிலும் குறிப்பாக வானொலி, செய்திப் படம், தபால்-தந்தி, நாணயமுறை, ஆண்டுக் கணக்கு, அரசாங்க அறிவிப்பு, கல்வித்துறை ஆகியவைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்தியைத் திணித்துவரும் முயற்சிகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

எந்த வகையிலேனும் இந்தியைத் தென்னாட்டின்மீது திணிக்கும் முயற்சியில இந்தியப் பேரரசு ஈடுபடுமேயானால் அதை முறியடித்து, தென்னக மக்களின் உரிமைகளை நிலைநாட்டப் போராடுவதற்குத் தயாராக இருக்கும்படி தென்னக மக்களை இம்மாநாடு வேண்டுக் கேட்டுக் கொள்கிறது.

முன்: காஞ்சி-கல்யாணசுந்தரம்

வழி: என். எஸ். இளங்கோ ஈ. வெ. கி. சம்பத்

பீடித்தொழிலாளருக்கு பாதுகாப்பு

தமிழ் நாட்டில் நடந்து வரும் மிகப் பெரிய கைத்தொழில்களில் ஒன்றாக இருப்பது பீடித்தொழில்; இத்தொழிலை நம்பி பல இலட்சக் கணக்கான மக்கள் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மற்ற தொழில்களில் சட்டப்படி கிடைக்கக்கூடிய பாதுகாப்பு கிடையாது.

தொழிற்சாலை சட்டப்படி கிடைக்கவேண்டிய சலுகைகளும் இத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதில்லை; இந்தச் சலுகைகளை கொடுக்க வேண்டுமென்பதற்காக பீடி முதலாளிகள் கண்டிராக்ட் முறையைக் கடைப்பிடித்து தொழில் நடத்தி வருகிறார்கள்.

ஆகவே, பீடித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பளிக்கவும், பாக்டரி சட்டப்படி சலுகைகள் கொடுக்கவும் உடனடியாக சென்னை அரசாங்கம் பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று இம்மகாநாடு சென்னை அரசாங்கத்தை வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறது.

முன்: ஏ. கே. கே. இராச மாணிக்கம்.

வழி: எம். எஸ். மணி.

என். ஜி. ஓ-வினருக்கு நியாயம் வழங்குக!

சென்னை மாநிலப் பதிவுபெறாத அரசாங்க ஊழியர்கள் தமது சம்பளம்—பஞ்சப்படி ஆகியவைகளின் உயர்வுக்காக பல காலமாகப் போராடிவந்தும், அக் கோரிக்கைகளை அரசியலார் இதுவரை தீர்த்துவைக்காதது கண்டு இம்மாநாடு மிகமிக வருந்துவதுடன், வாழ்க்கைத் தரத்துக்கும், விலை ஏற்றங்களுக்கும் தகுந்த வகையிலும், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குச் சமமாகவும் சம்பளம் பஞ்சப்படி ஆகியவைகளைத் திருத்தி அமைக்கும்படி இம்மாநாடு அரசினரை வற்புறுத்துகிறது.

முன்: சிற்றுளி-சுப்பிரமணியம்.

வழி: ஜி. பி. சோமசுந்தரம்.

கைத்தறியாளர் நெருக்கடித் தீர...

(அ) கைத்தறி நெசவுத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள இலட்சக் கணக்கான நெசவாளர் குடும்பங்களின் வேதனையைத் தீர்க்கவும்;

(ஆ) முன்பு தரப்பட்டு வந்த ரூ. 1-க்கு 9 புதிய காசுகள் தள்ளுபடியை மீண்டும் தரவும்;

(இ) கைத்தறித் துணிகள் வெளிநாடுகளில் நல்லமுறையில் விற்பனையாவதற்கு, கைத்தறித் துணி ஏற்றுமதி கார்ப்பரேஷன் அமைத்து, அதன் மூலம் கூட்டுறவு சங்கங்கள் தனியாரிடத்தில் கொள்முதல் செய்து உதவுமாறும்;

(ஈ) கரைபோட்ட வேட்டி, சேலைகள் நெய்வதை கைத்தறிக்கு மட்டும் ஒதுக்க வேண்டுமென்றும்;

(உ) கைத்தறி வார விழாவை தென்னகத்தில் டிசம்பர் திங்கள் இறுதியில் தொடங்கி பொங்கல நாள்வரை நடத்த வேண்டுமென்றும்;

(ஊ) அரசாங்க நிர்வாகத்துறைகளில்—குறிப்பாக பட்டாளம், போலீசு, மருத்துவமனை முதலியவைகளில் வாங்கப்படும் துணிகளை கைத்தறித் துணிகளாக வாங்கி உதவ வேண்டியும் அரசாங்கத்தினரை இம் மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: செவ்வாய்ப்பேட்டை கூட்டுறவு சங்கத் தலைவர் கே. ஏ. நடராசன்.

வழி: கரூர் குழந்தைவேலு, பி. எம். கோபால் கரூர், சோமு.

தொழில்கள் வேண்டும்

தென்னகத்தில் கிடைக்கும் கனிப் பொருள்களைப் பயன்படுத்தி, தொழில மயமாக்கும் வாய்ப்பையும்; வசதியையும் உண்டாக்கத் தரவேண்டும் என அரசாங்கத்தினரை வற்புறுத்துகிறது.

முன்: எம் பி. சுப்ரமணியம்

வழி: பி. மாணிக்சம்

வேடிக்கையில் ஒரு வேடிக்கை!

—(சங்கர்ஸ் வீக்லி)

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை-6